بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡدِ

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly **BADAR** Qadian Tamil

தொகுதி 8

இதழ் 40

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஹிஜ்ரி கமரி 1445 - ரபீயுல் அவ்வல்-19 ★ஹிஜ்ரி ஷம்ஸி 1402 - அகாஃ 19 ★ 5 அக்டோபர் 2023


## அல்லாஹ்வின் கட்டளை

وَلَا تَقُوۡلَنَّ لِشَایۡءٍ اِنِّیۡ فَاعِلٌ ذٰلِکَ غَدًا اِلَّاۤ اَنۡ یَّشَآءَ اللّٰہُ

**பொருள்**

நீர் எதனைப் பற்றியும் நிச்சயமாக நான் இதை நாளைக்குச் செய்து விடுவேன் என்று ஒருபோதும் கூறாதீர். ஆனால் அல்லாஹ் நாடியபடி (செய்வேன் எனக் கூறுவீராக).

(அல் கஹ்ஃப்: 24,25)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**நன்மைகளின் தாய் நல்லொழுக்கமே ஆகும். மனிதன் ஆற்றல் பெறுகின்ற நன்மைக்கான முதல் படித்தரம் நல்லொழுக்கம் ஆகும். எனது கோட்பாடு என்னவென்றால் உலகிலுள்ள ஒவ்வொரு பொருளும் நன்மை பயனளிக்கின்றது. ஆனால் நல்லொழுக்கங்களை பெறாமல் பயனளிக்கக் கூடிய இருப்பாக ஆகாத மனிதன் எந்தப் பணிக்கும் பயன்படாதவனாக ஆகிவிடுகின்றான்**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து......

### நல்லொழுக்கம் நன்மைகளுக்கான திறவுகோல் ஆகும்

நல்லொழுக்கம் ஏனைய நன்மைகளுக்கான திறவுகோல் ஆகும். எந்த மக்கள் ஒழுக்கத்தை சீர்படுத்திக் கொள்வதில்லையோ அவர்கள் மெதுமெதுவாக நன்மை பயக்காதவர்களாகி விடுகின்றனர். எனது கோட்பாடு என்னவென்றால் உலகிலுள்ள ஒவ்வொரு பொருளும் நன்மை பயக்கின்றது. விஷமும், குப்பையும் கூட பயன்படுகின்றது. ஸ்ட்ரைக்னைன் கூட பயன்படுகின்றது. மனித தசைகளின் மீது தனது தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

ஆனால், உயர் ஒழுக்கங்களை பெறாமல் பயனளிக்கக் கூடிய இருப்பாக மாறாத மனிதன் எந்தப் பணிக்கும் பயன்படாதவனாக ஆகிவிடுகின்றான். இறந்த விலங்குகளைக் காட்டிலும் கீழானவனாக ஆகிவிடுகின்றான். ஏனெனில், அவற்றின் தோலும், எலும்புகளும் கூட பயன்படுகின்றன. (ஆனால் மனிதனாகிய) அவனுடைய தோலும் கூட பயன்படுவதில்லை. இந்த ஒரு நிலையிலேயே மனிதன் بَلْ هُمْ اَضَلُّ என்பதை உண்மைப்படுத்தக் கூடியவனாக ஆகிவிடுகின்றான். எனவே, நினைவிற் கொள்ளுங்கள்! ஒழுக்கங்களை சீர்படுத்திக் கொள்வது மிகவும் அவசியம் ஆகும். ஏனெனில், நன்மைகளின் தாய் நல்லொழுக்கமே ஆகும். மனிதன் ஆற்றல் பெறுகின்ற நன்மைக்கான முதல் படித்தரம் நல்லொழுக்கம் ஆகும். கல்க் மற்றும் குல்க் என்ற இரண்டு சொற்கள் உள்ளன. கல்க் என்பது வெளிப்படையான படைப்பின் பெயர் ஆகும். குல்க் என்பது மறைமுகமான படைப்பின் பெயர் ஆகும்.

உதாரணமாக, வெளிப்படையில் ஒருவர் அழகானவராக இருக்கின்றார். மற்றொருவர் மிகவும் மோசமானவராக இருக்கின்றார். இதேபோன்று ஒருவர் உள்ளார்ந்த படைப்பில் மிகவும் அழகியவராகவும், உள்ளம் கவர்ந்தவராகவும் இருக்கின்றார். மற்றொருவர் உள்ளுக்குள் தொழுநோய் மற்றும் விட்டிலிகோவ் என்ற நோயால் பாதிக்கப்பட்டவரைப் போன்றும் அறுவறுக்கத்தக்கவராக இருக்கின்றார். ஆனால், வெளிப்படையான உருவமே தென்படுகின்றது. எனவே ஒவ்வொருவரும் வெளிப்படையாக பார்ப்பதையே அடையாளம் கண்டு கொள்கின்றார்.

மேலும் அழகை விரும்புகின்றார். மேலும், அழகற்றவராகவும், மோசமான உருவம்

இதன் தொடர்ச்சி : 10ம் பக்கம்...

**கிறிஸ்தவ சமுதாயத்தின் ஆரம்பம் எப்படி இருந்ததென்றால் அவர்கள் சிலை வணக்கத்திற்கு எதிராக ஜிஹாது செய்து வந்தனர். மேலும், இணை வைத்தலில் இருந்து தப்பிப்பதற்காக அவர்கள் நூற்றாண்டுகள் வரை பெரும் பெரும் தியாகங்கள் செய்தனர். ஆனால், முடிவு எவ்வாறு ஆகியுள்ளது என்றால் அசல் மார்க்கத்தின் எந்தவோர் அடையாளமும் தற்போதைய கிறிஸ்தவர்களிடம் காணப்படுவதில்லை**

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் சூரா அல்கஹ்ஃப் மற்றும் குகைவாசிகளைக் குறித்து விளக்கவுரை வழங்கியவாறு கூறுகின்றார்கள்: கஹ்ஃப் பற்றி நான் சுருக்கமாக சில சம்பவங்களைக் கூறுகின்றேன். நான் ஏற்கனவே கூறியது போன்று கஹ்ஃப் எனும் கேடாகோம்ப்ஸ் என்பது நிலத்தில் அமைக்கப்படும் கல்லறைகளின் பெயர் ஆகும். மரணத்தவர்களை (பாதாள) அறைகளில் வைத்து வந்தது ரோமானியர்கள் மற்றும் யூதர்களின் மரபாக இருந்தது. ரோமானிய அரசாங்கத்தின் பெரும், பெரும் நகரங்களுக்கு வெளியில் இதுபோன்ற இடங்கள் உருவாக்கப்பட்டிருந்தது. மேலும் அது கோடாகேம்பஸ் என்றழைக்கப்பட்டு வந்தது.

கிறிஸ்தவர்களின் மீது அநீதியிழைக்கப்பட்டபோது அவர்கள் உயிர் பிழைப்பதற்காக இந்த கல்லறைகளில் அடைக்கலம் பெறத் தொடங்கினர். அதற்கு இரண்டு காரணங்கள் இருந்ததாக தெரிகின்றது. ஒன்று, நிலத்தடி கல்லறைகளில் அவர்கள் எளிதாக ஒளிந்து கொள்ள முடிந்தது. மேலும், அமர்வதற்கும் தூங்குவதற்கும், தீவிர காலநிலையிலிருந்து பாதுகாப்பாக இருப்பதற்கான ஏற்பாடும் இருந்தது.

இரண்டாவது, பொதுவாக மக்கள் கல்லறைக்கு பயப்படுகின்றனர். மேலும், இவ்வாறு மக்களின் பார்வையிலிருந்து தப்பிப்பதற்கு அங்கு அதிகமான வாய்ப்பு இருந்தது. இந்த கேடாகோம்ப்ஸ் ரோமிற்கு அருகில் எகிப்து நாட்டின் நகரமான ஸிக்கந்தரியாவிற்கு அருகில் ஸிஸ்லீயிலும், மால்டாவிலும், நேப்பல்ஸிற்கு அருகிலும் தற்போது வரை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. மிஸ்டர் பெஞ்சமின் ஸ்காட் தி கேடாகோம்ப்ஸ் என்ற தனது நூலில் இவ்வாறு எழுதுகின்றார்கள்: எனது கருத்து என்னவென்றால், (பவுல் ரோமிற்குச் சென்றிருந்த) அந்த துவக்க காலத்தில் கிறிஸ்தவர்கள் தங்களது

இதன் தொடர்ச்சி : 12ம் பக்கம்.....

## நபிமொழி

**அநீதியிழைக்கப்பட்டவரின் முறையீட்டுத் துஆவிலிருந்து தப்பித்துக் கொள்ளுங்கள்**

(2448) ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் முஆஸ் (ரலி) அவர்களை யமன் நாட்டிற்கு அனுப்பி வைத்தார்கள். மேலும், அன்னார் (ஸல்) கூறினார்கள்: அநீதியிழைக்கப்பட்டவரின் (உங்களுக்கெதிரான) முறையீட்டுத் துஆவிலிருந்து தப்பித்துக் கொள்ளுங்கள். ஏனெனில், அவருக்கும் அல்லாஹ்விற்கும் இடையில் எந்தத் திரையும் கிடையாது.

(2449) ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி)அவர்கள் அறிவிக்கின்றார்கள்: இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எந்த நபர் ஒருவரை இழிவுபடுத்தி இருப்பாரோ அல்லது வேறு ஏதாவது அநீதியிழைத்து இருப்பாரோ அவர், எந்த தீனாரும், திர்ஹமும் பயன்படாத அந்த (மறுமை) நாளுக்கு முன்னதாக இன்று உலகில் அநீதியிழைக்கப்பட்ட அந்த நபரிடம் மன்னிப்பு பெற்றுக் கொள்ளட்டும் (ஏனெனில் மறுமை நாளில்) அவர் ஏதாவது நன்மை செய்திருந்தால் பின்னர் எந்த அளவிற்கு அவர் அநீதியிழைத்திருப்பாரோ அதற்கேற்ப அவரது நற்செயல்களிலிருந்து எடுக்கப்படும்; மேலும் அவரிடம் நன்மைகள் ஏதும் இல்லையென்றால் பின்னர் அநீதியிழைக்கப்பட்டவரின் தீமைகளை எடுத்து அந்த அநீதியிழைத்தவரின் மீது சுமத்தப்படும்.

(ஸஹீஹ் புகாரி, தொகுதி 4, கிதாபுல் மழாலிம், 2008-ம் ஆண்டு காதியான் பதிப்பு)


பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.

Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஞானம் நிறைந்த வழிகாட்டல்களின் ஒளியில்**

**ஜல்ஸா ஸாலானாவில் கலந்து கொள்வதன் நோக்கம் மற்றும் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் ஜெர்மனிக்கு புதிய நூற்றாண்டில் வழங்கப்பட்டுள்ள இலக்கு**

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பைஅத்தில் இணையக் கூடியவர்கள் மார்க்க அறிவை கற்றுக் கொள்ள வேண்டும்;ஆன்மிகத்தில் முன்னேற வேண்டும்;அல்லாஹ்வுடனான தொடர்பிலும், அன்பிலும் முன்னேற வேண்டும். இறைத் தூதர் (ஸல்) அவர்களை முழுமையாகப் பின்பற்றக் கூடியவர்களாக ஆக வேண்டும். அன்னாருடன் நேசமான தொடர்பு இருக்க வேண்டும். உலகத்தின் மீதான நேசம் தணிந்து விட வேண்டும்; மேலும் மார்க்கம் முதன்மையாக இருக்க வேண்டும்.**

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வழிகாட்டல்களின் ஒளியில் நான் எடுத்துரைத்துள்ள விஷயங்களே அடுத்த நூற்றாண்டிற்கான சுருக்கமான செயல் திட்டம் ஆகும். நாம் உலகத்தின் உள்ளங்களை வெல்ல இருக்கின்றோம் என்ற வாதத்தை எடுத்துக் கொண்டு நிற்கின்றோம். இந்த உலகத்தை ஏக இறைவனை ஏற்கச் செய்ய வேண்டும். உலகை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பாதங்களில் கொண்டு வந்து விடுவோம்; என்பது நமது வாதமாகும். எனவே இந்த அடிப்படையில் நம்மில் ஒவ்வொருவரும் தம்மை ஆய்வு செய்ய வேண்டும். மேலும், நாங்கள் உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்கியவாறு நமது இந்த நோக்கத்தை அடைவதற்கு முழு முயற்சி செய்வோம்; மேலும், எங்களது பிள்ளைகளுக்கும், சந்ததிகளுக்கும் இதற்கான அறிவுரை செய்து கொண்டிருப்போம்; மேலும் அல்லாஹ்வுடனான தொடர்பிற்கான ஆர்வம் ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறைக்கு கடந்து கொண்டே சென்று விடும் அளவிற்கு அவர்களுக்கு தர்பிய்யத் செய்வோம் என்று ஒரு புதிய உறுதியுடன் ஜெர்மனியின் அஹ்மதிய்யா ஜமாஅத் புதிய நூற்றாண்டில் நுழைய வேண்டும். அல்லாஹ் நமக்கு அதற்கான நற்பேறு வழங்குவானாக.**

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 01 செப்டம்பர் 2023** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1402 ஆண்டு **தபூக்** மாதம் **01ஆம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۞ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۞
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۞ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ۞
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۞
صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ۞

அல்ஹம்துலில்லாஹ் இன்று அஹ்மதிய்யா ஜமாஅத் ஜெர்மனியின் ஜல்ஸா ஸாலானா நான்கு ஆண்டுகளின் கட்டுப்பாடுகளுக்குப் பிறகு பரந்துபட்ட அளவில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. ஜல்ஸாவில் கலந்து கொள்ளக் கூடிய அனைவரையும் ஜல்ஸாவின் நோக்கத்தை பெறக் கூடியவர்களாக ஆக்குவானாக. அல்லாஹ் நமக்கு மீண்டும் ஒன்று கூடுவதற்கான சந்தர்ப்பத்தை வழங்கிவிட்டான்; இப்போது நாம் ஒருவர் மற்றவரை சந்தித்துக் கொள்ளலாம்;சில சபைகளைக் கூட்டலாம்; இது போதும் என்று மகிழ்சியடைந்து விடாதீர்கள். (இது) கூடாது!மாறாக, ஜல்ஸாவை நடத்துவதற்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நமக்கு கூறியுள்ள நோக்கம் ஒரு மாபெரும் நோக்கம் ஆகும். மேலும் பெரும் வேதனையுடன் அதனை வெளிப்படுத்தியும் இருக்கின்றார்கள்.அது இதுவாகும். அதாவது, அன்னாரின் பைஅத்தில் இணையக் கூடியவர்கள் மார்க்க அறிவை கற்றுக் கொள்ள வேண்டும்;ஆன்மிகத்தில் முன்னேற வேண்டும்;அல்லாஹ்வுடனான தொடர்பிலும், அன்பிலும் முன்னேற வேண்டும். இறைத் தூதர் (ஸல்) அவர்களை முழுமையாகப் பின்பற்றக் கூடியவர்களாக ஆக வேண்டும். அன்னாருடன் நேசமான தொடர்பு இருக்க வேண்டும். உலகத்தின் மீதான நேசம் தணிந்து விட வேண்டும்; மேலும் மார்க்கம் முதன்மையாக இருக்க வேண்டும்.

அன்னார் (அலை) ஒரு சந்தர்ப்பத்தில் கூறுகின்றார்கள்: ஜமாஅத்தின் பைஅத்தில் இணையக் கூடிய அனைத்து தூயவர்களுக்கும் இது தெளிவாகிக் கொள்ளட்டும்.அதாவது, உலக நேசம் தணிந்து விட வேண்டும்; மேலும், நமது கண்ணியத்திற்குரிய எஜமானர் மற்றும் ஒப்புக் கொள்ளப்பட்ட தூதர்(ஸல்) அவர்களின் மீதான நேசம் உள்ளத்தில் மிகைத்து விட வேண்டும் என்பது பைஅத் செய்வதன் நோக்கம் ஆகும்.
(ஆஸ்மானி ஃபைஸலா, ரூஹானீ கஸாயீன்,தொகுதி 4, பக்கம் 351)

எனவே அல்லாஹ் மற்றும் அவனது தூதர் (ஸல்) அவர்களின் மீதான நேசத்தில் மேலோங்கிவிட்ட அந்த தூயவர்களில் நாம் இணைந்து விட வேண்டும்; மேலும் நமது ஒவ்வொரு சொல்லிலும், செயலிலும் அதன் வெளிப்பாடு இருக்க வேண்டும் என்பது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பைஅத்தின் கீழ் வரக்கூடியவர்களின் முதல் முயற்சியாக இருக்க வேண்டும்.

அஹ்மதிய்யா ஜமாஅத் ஜெர்மனியில் நிலைபெற்று இந்த ஆண்டுடன் நூறு ஆண்டுகளும் ஆகிவிட்டன. ஜமாஅத் (இங்கு) நிறுவப்பட்டு நூறு ஆண்டுகள் முழுமையடைந்ததையொட்டி இந்த ஜல்ஸாவை நடத்துகின்றோம்;இது ஜமாஅத்தினுடைய நூற்றாண்டு ஜல்ஸா ஆகும் என்று ஜெர்மன் ஜமாஅத்துகளின் உறுப்பினர்கள் மிகவும் excited ஆகவும் இருக்கின்றனர்; மேலும் மகிழ்ச்சியாகவும் இருக்கின்றனர்.ஏராளமான மக்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்துகின்றனர். அல்லாஹ் இன்றிலிருந்து நூறு ஆண்டுகளுக்கு முன்னர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மூலமாக இஸ்லாத்தின் அழகிய போதனையை இந்த நாட்டில் எட்ட வைத்துள்ளான் என்பது நிச்சயமாக மகிழ்ச்சியான விஷயம் ஆகும். இன்னும் கூறப்போனால், அன்னாரின் வாழ்க்கையிலேயே இங்கு தூதுச் செய்தி வந்தடைந்து இருந்தது. எனவே தூதுச் செய்தி வந்தடைந்து நூறு வருடங்களுக்கும் மேலாகிவிட்டது. ஆனால், இந்த நூறு ஆண்டுகளில் நாம் எதனைப் பெற்றோம்; நாம் நமது ஈமானை எந்த அளவிற்கு பாதுகாத்தோம் என்பதையும் நாம் பார்க்க வேண்டும்; சிந்திக்க வேண்டும்.

ஜமாஅத் இங்கு ஆரம்பமானபோது ஒரு சில மக்களே இருந்தனர். பின்னர் பாகிஸ்தானின் நிலைமைகள் மாறின; உலகத்தின் சூழல்கள் மாறின. எனவே ஏராளமான அஹ்மதிகள் தாங்கள் அஹ்மதிகளாக இருந்ததால் இந்த நாட்டில் வந்து குடியேறினர். மேலும் அஹ்மதிகளாக இருந்ததன் காரணத்தினால் அவர்களது நாட்டில் அல்லாஹ் மற்றும் அவனது தூதர் (ஸல்) அவர்களின் போதனையின்படி அமல் செய்வதற்கும், அதனை வெளிப்படுத்துவதற்கும் அவர்கள் மீது கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தன. அவர்கள் இங்கு வந்து தங்களது மார்க்கத்தின்படி அமல் செய்வதற்கான மார்க்கச் சுதந்திரம் அவர்களுக்கு கிடைத்திருக்கும்போது பின்னர் அவர்கள் ஒரு களங்கமற்ற அன்புடன் தமது நிலைமையில் தூய மாற்றத்தை அவர்கள் ஏற்படுத்தி பின்னர் அவற்றின்படி நிலைபெற்றிருப்பதற்கு அவர்கள் முயற்சி செய்ய வேண்டும்.

இதனை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது ஜமாஅத்திடம் எதிர்பார்க்கின்றார்கள். நாம் அந்த முயற்சியை செய்தோமா? ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் விரும்பும் அந்த தூய அடியார்களில் இணைவதற்காக நமது ஆன்மிக நிலைமைகளை மேம்படுத்துவதுடன் தமது பிள்ளைகளையும் மார்க்கத்துடன் இணைத்து

வைப்பதற்கான சிறப்பான முயற்சிகளை நாம் செய்தோமோ? நாம் செய்திருந்தால் பின்னர் நூற்றாண்டு முழுமையடைந்ததையொட்டி நாம் செலுத்தக் கூடிய உண்மையான நன்றிக் கடன் இதுவேயாகும். இதனையே ஓர் அஹ்மதியிடமிருந்து எதிர்பார்க்க முடியும். ஒருவேளை (அவ்வாறு) செய்யவில்லையென்றால் பின்னர் உலகியல் சடங்கு சம்பிரதாயங்களுக்கேற்ப மட்டும் நூற்றாண்டு நிறைவு பெறுவதையொட்டி மகிழ்ச்சியடைவது பயனற்றதாகும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் பல்வேறு இடங்களில் தமது பைஅத்தின் கீழ் வரக்கூடியவர்கள் தங்களிடம் தூய மற்றும் புரட்சிகரமான மாறுதல்களை உருவாக்கிக் கொள்வதற்கான செயல் திட்டங்களை வழங்கியுள்ளார்கள்; அவர்களுக்கு அறிவுரை வழங்கியுள்ளார்கள். எனவே அன்னாரின் பைஅத்தின் கீழ் வந்த அந்த தூயவர்களின் கூட்டத்தில் நாம் உண்மையாகவே இணைந்திருக்கின்றோம் என்றால் பின்னர் நாம் எல்லா நேரமும் அசைபோட்டுக் கொண்டே இருக்க வேண்டும். மேலும், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பைஅத்தின் கீழ் வந்ததற்கான அந்த நோக்கத்தை நாம் எந்த அளவிற்கு நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றோம்? என்று தமது சொல்லையும், செயலையும் அதனுடன் ஒப்பிட்டுப் பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும். நாம் இந்த முன்னேற்றமடைந்த உலக நாடுகளுக்கு வந்து நமது அந்த நோக்கத்தை மறந்துவிடவில்லையே? உலகின் பளபளப்புகள் நம்மை பைஅத்தின் நோக்கத்தை மறக்கக் கூடியவர்களாக ஆக்கிவிடவில்லையே?என்றும் நாம் நம்மை ஆய்வு செய்து கொண்டிருக்க வேண்டும். அவை நம்மை மறக்கச் செய்துவிட்டன என்றால், பின்னர் இந்த நூற்றாண்டு விழாக் கொண்டாட்டம் பயனற்றதாகும்.

தற்போது நான் நமது நோக்கத்தின் பக்கம் வழிகாட்டக் கூடிய ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சில வழிகாட்டல்களை உங்களுக்கு முன்னால் வைப்பேன்.

எல்லாவற்றையும் விட முதலில் நமது பைஅத் நம்மிடம் என்ன எதிர்பார்க்கின்றது? என்று கூறிய அன்னாருடைய இந்த மேற்கோளை நான் முன் வைப்பேன்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: பைஅத் செய்து விடுவதால் மட்டும் இறைவன் திருப்தி அடைந்து விடுவான் என்று கருதாதீர்கள். இதுவோ வெறும் வெளிப்புறத் தோல் மட்டுமே ஆகும். சாறு என்பது அதனுள்ளேயே இருக்கின்றது. பெரும்பாலும் இயற்கையான சட்டம் என்னவென்றால், வெளியில் ஒரு தோல் இருக்கின்றது; மேலும் சாறு அதனுள்ளே இருக்கின்றது. தோலால் மட்டுமே எந்த பயனுமில்லை. சாறு தான் பயன்படுத்தப்படுகின்றது. சிலவை எப்படிப்பட்டவையாக இருக்கின்றன என்றால், அவற்றில் சாறே இருப்பதில்லை. மேலும் வெள்ளைக் கருவும் இல்லாத மஞ்சள் கருவும் இல்லாத கோழி முட்டையின் தோடுகள் எதற்கும் பயன்படாத குப்பையைப் போன்று வீசப்படுகின்றன. ஆயினும், ஒரு சில நிமிடங்கள் வரை ஏதாவது குழந்தையின் விளையாட்டிற்கு காரணியாக இருக்கக் கூடும்.இதேபோன்று பைஅத் மற்றும் ஈமானிற்கான வாதம் செய்கின்ற அந்த மனிதர் அந்த விஷயங்களின் சாறை தன்னகத்தே கொண்டிருக்கவில்லையென்றால் பின்னர் ஒரு காலம் வரும்; அப்போது அவர் சிறு அடியால் தூள்தூளாகிவிடும் அந்த முட்டைத் தோடுகளைப் போன்று அவர் தூக்கி எறியப்படுவார். ஜமாஅத்திலிருந்து பின்வாங்கி விடும் மக்களின் நிலைமையும் இதுவாகவே இருக்கின்றது.

இதேபோன்று அன்னார் (அலை) கூறினார்கள்: இதேபோன்று பைஅத் மற்றும் ஈமானிற்கான வாதம் செய்கின்றவர் நான் (வெறும்) தோலாக இருக்கின்றேனா? அல்லது சாறாக இருக்கின்றேனா? என்று ஆய்வு செய்து பார்க்க வேண்டும். தம்மைத் தாமே ஆய்வு செய்து கொண்டிருக்க வேண்டும்.

சாறு உருவாகாத வரை ஈமான், நேசம், கட்டுப்படுதல், பைஅத், கொள்கை, இஸ்லாத்தின் சீடர் போன்ற வாதங்களை செய்பவர் வாதத்தில் உண்மையாளர் கிடையாது. நினைவிற் கொள்ளுங்கள்! அல்லாஹ்வின் சமூகத்தில் சாறை தவிர்த்து (வெளியிலுள்ள) தோலுக்கு எந்த மதிப்பும் கிடையாது என்பது உண்மையான விஷயம் ஆகும்.

நன்றாக நினைவிற் கொள்ளுங்கள்! மரணம் எப்போது வந்து விடும்? என்று தெரியாது. ஆனால், மரணிப்பது நிச்சயம் என்பது உறுதியான விஷயம் ஆகும். எனவே வெற்று வாதத்தின் மீது ஒருபோதும் திருப்தி அடைந்தும் விடாதீர்கள்; மகிழ்ச்சியடைந்தும் விடாதீர்கள். ஒருபோதும், ஒருபோதும் (அது) நன்மை பயக்கக் கூடியது அல்ல. மனிதன் தன் மீது ஏராளமான மரணங்களை ஏற்படுத்திக் கொள்ளாத வரையிலும், ஏராளமான மாறுதல்களையும், புரட்சிகளையும் கடந்து செல்லாத வரையிலும் அவன் மனிதத்துவத்தின் அசல் நோக்கத்தை பெற முடியாது. (மல்ஃபூஸாத், தொகுதி 2, பக்கம் 167, 1984-ம் ஆண்டு பதிப்பு)

எனவே பைஅத்திற்கான உரிமையை நிறைவேற்றுவது என்பது ஒன்றும் சாதாரண விஷயம் கிடையாது. நாம் எப்போதும் அல்லாஹ்வின் கட்டளைகளை பின்பற்றி நடப்பதற்கு முயற்சி செய்யும்போது உலகியல் இன்பங்களை நீக்கிய பிறகுதான் மனிதன் அப்படிப்பட்ட அந்தஸ்தை அடைய முடியும். உலகத்தில் வாழ்ந்தவாறு மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்குவதே அசல் ஜிஹாது ஆகும். அதற்கு நாம் முயற்சி செய்ய வேண்டும்.

உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்குவது என்பது என்ன! உலகத்தை முற்றிலும் விட்டு விடவேண்டுமா? இதனை விளக்கியவாறு அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: எனது இந்தக் கருத்தின் பொருள் முஸ்லிம்கள் சோம்பேறிகள் ஆகிவிட வேண்டும் என்பது ஒருபோதும் இல்லை. இஸ்லாம் எவரையும் சோம்பேறி ஆக்குவதில்லை. தங்களது வியாபாரங்களிலும், வேலைகளிலும் மும்முரமாகவும் இருக்கட்டும்; ஆனால், இறைவனுக்காக அவர்கள் நேரமே ஒதுக்காமல் இருப்பதை நான் விரும்பவில்லை. ஆம்! வியாபாரத்திற்கான நேரத்தில் வியாபாரம் செய்யட்டும். மேலும், அல்லாஹ்வின் மீதான அச்சம் மற்றும் பயத்தையும் அந்த நேரத்திலும் அவர்கள் கருத்தில் கொள்ள வேண்டும். அந்நிலையில் அந்த வியாபாரமும் அவர்களின் இறைவணக்கத்தின் வடிவத்தை பெற்றுவிடும். தொழுகையின் நேரத்தின் தொழுகையை விட்டுவிடக் கூடாது. என்ன விவகாரமாக இருந்தாலும் மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்குங்கள். உலக இன்பங்களை பெறுவது மட்டுமே நோக்கமாக இருக்கக் கூடாது. அசல் நோக்கம் மார்க்கமாக இருக்க வேண்டும். பின்னர் உலகியல் பணிகளும் மார்க்கமாகவே ஆகிவிடும்.

ஸஹாபா பெருமக்களைப் பாருங்கள்! அவர்கள் துன்பத்திலும் துன்பமான நேரத்தில் கூட இறைவனை விட்டுவிடவில்லை. போர் மற்றும் வாளுக்கான நேரம் எப்படிப்பட்ட அபாயகரமான நேரமாக இருக்கும் என்றால் அதனை கற்பனை செய்து பார்த்தாலே மனிதன் பதற்றமடைந்து விடுவான். அந்த நேரமோ உத்வேகம் மற்றும் கோபத்திற்கான நேரமாக இருக்கின்றது. அந்த நிலைமையிலும் அவர்கள் இறைவனிடமிருந்து கவனமற்றவர்களாக இருக்கவில்லை. தொழுகைகளை விட்டுவிடவில்லை. துஆக்களை கைகொண்டார்கள். தற்போது நிலவும் துர்பாக்கியம் என்னவென்றால், எல்லா ரீதியிலும் பெரும் அழுத்தம் கொடுக்கின்றனர். பெரும் பெரும் சொற்பொழிவுகள் நிகழ்த்துகின்றனர். முஸ்லிம்கள் முன்னேற்றம் அடைவார்கள் என்று மாநாடுகள் நடத்துகின்றனர். ஆனால், இறைவனிடமிருந்து எந்த அளவிற்கு கவனமற்றவர்களாக இருக்கின்றனர் என்றால் மறந்தும் கூட அவன் பக்கம் கவனம் செலுத்துவதில்லை. இது சாதரண முஸ்லிம்களின் நிலையாகும்.

பின்னர் இதுபோன்ற சூழலில், அவர்களின் முயற்சிகள் அனைத்துமே உலகத்திற்கானதாக இருக்கும்போது, அவர்களின் முயற்சிகள் விளைவை ஏற்படுத்தும் என்று எவ்வாறு நம்ப முடியும். நினைவிற் கொள்ளுங்கள்!

لَآاِلٰہَ اِلَّا اللّٰہ

என்ற கலிமா உள்ளத்திலும், உயிரிலும் கலந்து விடாத வரையிலும், உடலின் ஒவ்வோர் அணுவிலும் இஸ்லாத்தின் ஒளியும்,ஆட்சிமையும் உருவாகிவிடாத வரையிலும் ஒருபோதும் முன்னேற்றம் ஏற்படாது.இது எழுதப்பட்டுள்ள விஷயம் ஆகும்.மேற்கத்திய சமுதாயங்கள் முன்னேறிக் கொண்டிருக்கின்றனவே! என்று அவர்களின் முன்னுதாரணத்தை நீங்கள் முன் வைத்தால் (அதற்குரிய பதில்) ,அவர்களின் விவகாரம் வேறு ஆகும். உங்களுக்கு வேதம் வழங்கப்பட்டுள்ளது;உங்கள் மீது சான்று முழுமை செய்யப்பட்டு விட்டது. அவர்களின் விவகாரமும், விசாரணையின் நாளும் தனிப்பட்டதாகும். அவர்கள் எவ்வாறு பிடிக்கப்படுவார்கள்?எப்போது நிகழும்? என்பது வேறு விஷயம் ஆகும். அது நிச்சயம் நிகழும். அவர்கள் இறைவனுக்கு பதில் சொல்லியே தீருவார்கள். ஆயினும், அல்லாஹ் இவ்வுலகில் செய்யாமல் மரணத்திற்குப் பிறகு செய்யக் கூடும். ஆனால், நாமோ ஈமானிய வாதம் செய்கின்றோம். பின்னர் (அதன்படி) அமல் செய்யவில்லையென்றால் பின்னர் இவ்வுலகில் இருந்தே நமது தண்டனை ஆரம்பமாகிவிடும். மிகவும் அச்சத்திற்குரிய விஷயம் ஆகும்.

கூறினார்கள்: நீங்கள் அல்லாஹ்வின் வேதத்தை விட்டுவிடுவீர்கள் என்றால் பின்னர் உங்களுக்கு இவ்வுலகத்திலேயே நரகம் தயாராக இருக்கின்றது.

இதுபோன்ற நிலையில் ஏறத்தாழ ஒவ்வொரு நகரத்திலும் முஸ்லிம்களின் முன்னேற்றத்திற்காக அமைப்புகளும் இருக்கின்றன ; மாநாடுகளும் நடக்கின்றன. ஆனால்,திருக்குர்ஆனை உங்களது இமாம் ஆக்கிக் கொள்ளுங்கள்; அதன்படி அமல் செய்யுங்கள் என்று இஸ்லாமிய அனுதாபம் கொண்ட எவருடைய நாவிலிருந்தும் வருவதில்லை.

அவர்கள் (ஏதாவது) கூறுகின்றனர் என்றால், ஆங்கிலம் பயிலுங்கள்; கல்லூரி கட்டுங்கள்; பேரஸ்டர் ஆகுங்கள் என்று மட்டுமே கூறுகின்றனர். இறைவன் மீதான ஈமான் இருக்கவில்லை என்பது இதிலிருந்து தெரிய வருகின்றது. பத்து நாட்களுக்குப் பிறகு மருந்து பயன் தரவில்லையென்றால் மருத்துவர் கூட தமது சிகிச்சையிலிருந்து விலகி விடுகின்றார். அந்த சிகிச்சையை விட்டு விட்டு வேறு சிகிச்சையை தொடங்கி விடுகின்றார்.(ஆனால்) இங்கோ தோல்வி மேல் தோல்வி ஏற்பட்டுக் கொண்டே இருக்கின்றது. மேலும், அதிலிருந்து விலகுவதில்லை.

இறைவன் இல்லையென்றால் பின்னர் அவனை விட்டு விட்டு நீங்கள் நிச்சயமாக முன்னேற்றம் அடையலாம். ஆனால் இறைவன் இருக்கின்றபோது, மேலும் உறுதியாக இறைவன் இருக்கின்றான் எனும் போது பின்னர் அவனை விட்டுவிட்டு நீங்கள் ஒருபோதும் முன்னேற்றம் அடைய முடியாது. அவனையும், அவனது வேதத்தையும் அவமரியாதை செய்து விட்டு வெற்றிபெறலாம்; மேலும் (ஒன்றுபட்ட) சமுதாயம் ஆகிவிடலாம் என்று நீங்கள் விரும்பினால் (அது) ஒருபோதும் நடக்காது.

முஸ்லிம் அல்லாதவர்களுக்கு திருக்குர்ஆனை எரிப்பதற்கு எப்படி தைரியம் வந்தது? ஏனெனில், நாம் செயல்ரீதியாக திருக்குர்ஆனின் போதனையின்படி அமல் செய்வதை விட்டுவிட்டோம். மேலும் இதன் காரணமாகவே அவர்களுக்கு தைரியம் பிறந்தது.அதனால் நாமும் பாவம் செய்தவர்கள் ஆவோம். முஸ்லிம்கள் பாவம் செய்தவர்கள் ஆகிவிட்டனர்.

கூறினார்கள்: எமது கருத்து இதுவேயாகும். எவரது கண்கள் பார்க்கின்றனவோ அவர் கண்டு கொள்ளட்டும்! இறைவனை அடையாளம் காணுங்கள்; அவன் மீது உயிருள்ள ஈமானை உருவாக்குங்கள். இதுவே முன்னேற்றத்திற்கான ஒரே வழியாகும். நாம் இந்த விஷயங்களை உலக வணங்கிகளின் சபைகளில் எடுத்துரைத்தால் அவர்கள் எள்ளி நகையாடுவார்கள். ஆனால், நமக்கோ கருணை ஏற்படுகின்றது. நாம் பார்க்கின்றவனை இந்த மக்களால் பார்க்க முடியவில்லையே என்று வேதனை ஏற்படுகின்றது. (மல்ஃபூஸாத், தொகுதி 158-159, 1984-ம் ஆண்டு பதிப்பு)

கூறினார்கள்: நான் எப்படிப்பட்ட பார்வை கொண்டு பார்த்துக் கொண்டிருக்கின்றேன் என்றால் திருக்குர்ஆனின்படி முஸ்லிம்கள் அமல் செய்யமாட்டார்கள் என்றால் (பின்னர்) அவர்களுக்கு அழிவு மட்டுமே உள்ளது.

எனவே முஸ்லிம் என்று கூறிக் கொண்டு பின்னர் இரட்டை அமல் செல்லுபடி ஆகாது. முஸ்லிம்களின் நிலைக் குறித்த இந்தச் சித்திரம் நமக்கு போதுமான படிப்பினை ஆகும். அவர்கள் மார்க்கத்தின் பெயரை கூறுகின்றனர். ஆனால், உலகியல் விஷயங்களையே பேசுகின்றனர். அதன் விளைவு என்னவென்றால், சமுதாயம் என்ற ரீதியில் முஸ்லிம்கள் நிலை எல்லா இடத்திலும் மோசமானதாகவே இருக்கின்றது. எனவே இது மிகவும் சிந்திக்க வேண்டிய இடம் ஆகும். மிகவும் அச்சத்திற்குரிய இடம் ஆகும்.

பின்னர் எல்லா நிலையிலும் உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்குவது தொடர்பாக மேலும் கூடுதலாக ஓரிடத்தில் அன்னார் (அலை) கூறினார்கள்: பாருங்கள்! இரண்டு வகையான மக்கள் இருக்கின்றனர். ஒன்று, இஸ்லாத்தை ஒப்புக் கொண்டு விட்டு உலகியல் வியாபாரங்களிலும், வணிகங்களிலும் மும்முரமாகிவிடுகின்ற அந்த மக்கள் ஆவர். அவர்களின் தலையில் ஷைத்தான் சவாரி செய்து கொள்கின்றான். வியாபாரம் செய்வது தடையாகும் என்பது எனது பொருள் அல்ல.(முன்னரும் விளக்கம் அளித்துவிட்டார்கள்.)

இல்லை! ஸஹாபிகளும் வியாபாரம் செய்து வந்தனர். ஆனால், உலகத்தை விட மார்க்கத்திற்கு முதன்மை வழங்கி வந்தனர். அவர்கள் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டனர் என்றால் பின்னர் உறுதியுடன் அவர்களின் உள்ளத்தை நிறைத்து விடும் இஸ்லாம் தொடர்பான உண்மையான ஞானங்களை அவர்கள் பெற்றனர். அவர்கள் எந்தவொரு மைதானத்திலும் ஷைத்தானின் தாக்குதல்களினால் தடுமாற்றம் அடையாமல் இருந்ததற்கு இதுவே காரணமாக இருந்தது.

எனவே இது ஒவ்வோர் அஹ்மதிக்கும் வழிகாட்டும் நெறிமுறையாகும்.

எந்தவொரு விஷயமும் அவர்களை உண்மையை வெளிப்படுத்துவதிலிருந்து தடுக்க முடியவில்லை. இரட்டை வேடம் போடக் கூடாது. உங்களது மார்க்கத்தை மறைக்கக் கூடாது.

கூறினார்கள்: இதிலிருந்து நான் கூறுவது இது மட்டுமே ஆகும். அதவாது, எவர்கள் முற்றிலும் உலகின் அடியார்களாகவும், அடிமைகளாகவும் ஆகிவடுகின்றனரோ அவர்கள் ஒருவகையில் உலக வணங்கிகளாக ஆகிவிடுகின்றனர். அப்படிப்பட்ட மக்கள் மீது ஷைத்தான் தனது ஆதிக்கத்தையும், கட்டுப்பாட்டையும் செலுத்தி விடுகின்றான்.

இரண்டாவது, மார்க்கத்தின் முன்னேற்றத்தின் கவலையில் இருக்கின்ற மக்கள் ஆவர். இவர்களே அல்லாஹ்வின் கூட்டத்தினர் என்று அழைக்கப்படுகின்றனர். மேலும் அவர்கள் ஷைத்தான் மற்றும் அவனது படையின் மீது வெற்றி பெறுகின்றனர்.

இவர்கள் சண்டையிடக்கூடிய மற்றும் போர் புரியக் கூடிய உலகியல் ஹிஸ்புல்லாஹ் இல்லை. இவர்கள் அல்லாஹ்வுடன் தொடர்பை உருவாக்கக் கூடிய கூட்டத்தினர் ஆவர். இவர்களே அல்லாஹ்வின் கூட்டத்தினர் என்றழைக்கப்படுகின்றனர். இவர்கள் ஷைத்தான் மற்றும் அவனது படையினர் மீது வெற்றிக் கொள்கின்றனர்.

செல்வம் என்பது வியாபாரத்தின் மூலமாக அதிகரிக்கின்றது. எனவே இறைவனும் மார்கத்தை தேடுதல் மற்றும் மார்க்கத்தில் முன்னேறத்திற்கான ஆசை ஆகியவற்றை ஒரு வணிகமாகவே குறிப்பிட்டுள்ளான். எனவே,

هَلۡ اَدُلُّكُمۡ عَلٰى تِجَارَةٍ تُنۡجِيۡكُمۡ مِّنۡ عَذَابٍ اَلِيۡمٍ

என்று இறைவன் கூறினான்.

வேதனை மிக்க தண்டனையிலிருந்து உங்களை பாதுாக்கின்ற வணிகத்தை குறித்து நான் உங்களுக்கு அறிவித்துக் கொடுக்கட்டுமா? அது என்ன? மார்க்கத்தின் வணிகம் ஆகும்.

கூறினார்கள்: மிகச் சிறந்த வணிகம் என்பது மார்க்க வணிகம் ஆகும். அது வேதனை மிக்க தண்டனையிலிருந்து இரட்சிப்பு வழங்குகின்றது. எனவே நானும் இறைவனின் அந்த சொற்களிலேயே உங்களிடம் இதனைக் கூறுகின்றேன்.

هَلۡ اَدُلُّكُمۡ عَلٰى تِجَارَةٍ تُنۡجِيۡكُمۡ مِّنۡ عَذَابٍ اَلِيۡمٍ

என்பதில் மார்க்க முன்னேற்றம் மற்றும் ஆர்வத்தை எவர்கள் குறைத்துக் கொள்வதில்லையோ அவர்கள் மீது நான் அதிகம் நம்பிக்கை வைத்துள்ளேன். எவர்கள் இதில் குறைவு செய்வார்களோ அவர்கள் மீது ஷைத்தான் ஆதிக்கம் செலுத்தி விடக் கூடாதே என்ற அச்சம் எனக்கு உள்ளது. எனவே ஒருபோதும் சோம்பேறி ஆகிவிடக் கூடாது. இறை ஞானம் அதிகரிக்க வேண்டும் என்பதற்காக புரியாத எல்லா விஷயத்தையும் கேட்க வேண்டும். கேள்வி கேட்பது ஹராம் அல்ல. மறுக்கின்ற நிலையிலும் கேட்க வேண்டும். மேலும் செயல் முன்னேற்றத்திற்காகவும் (கேட்க வேண்டும்).

ஒரு விஷயத்தில் மறுப்பு இருக்கின்றதென்றால் அப்போதும் கேளுங்கள். கேள்வியைக் கேளுங்கள்; பதிலைப் பெற்றுக் கொள்ளுங்கள். மேலும் அறிவார்ந்த முன்னேற்றங்களுக்காகவும் கேட்க வேண்டும்.

எவர் அறிவில் முன்னேற்றத்தை விரும்புகின்றாரோ அவர் திருக்குர்ஆனை ஆழமாக படிக்க வேண்டும். எங்கு புரியவில்லையோ கேட்க வேண்டும். சில ஞானங்கள் புரியவில்லையென்றால் பின்னர் பிறரிடம் கேட்டு பயனடைந்து கொள்ள வேண்டும். திருக்குர்ஆன் என்பது ஒரு மார்க்கக் கடல் ஆகும். அதன் அடியில் பெரும், பெரும் அரிதான மற்றும் விலைமதிப்பற்ற ரத்தினங்கள் இருக்கின்றன. (மல்ஃபூஸாத், தொகுதி 3, 193 -194, 1984-ம் ஆண்டு பதிப்பு)

எனவே மார்க்க அறிவை பெற்றுக் கொள்வதற்காக திருக்குர்ஆனின் வழிகாட்டலை பற்றிப் பிடிப்பதற்கு அவசியம் உள்ளது. மேலும் இந்த திருக்குர்ஆன் மட்டுமே இனி சரியான வழிகாட்டலை வழங்கும். இந்த வழிமுறையே உலகத்தை விட மார்க்கத்திற்கு முதன்மை வழங்குவதன் பக்கம் வழிகாட்டும். எனவே, எத்தனை நபர்கள் திருக்குர்ஆனை சிந்தித்து ஓதுகின்றனர்? எத்தனை நபர்கள் அதனை திலாவத் செய்கின்றனர்? மேலும், பின்னர் அதன்படி அமல் செய்ய முயற்சி செய்கின்றனர்? என்று நாம் (நம்மை) ஆய்வு செய்ய வேண்டும்.

திருக்குர்ஆன் நம் மீது ஏராளமான கருணைகளை செய்துள்ளது; எனவே அதனை மிகவும் சிந்தித்தும் கவனத்துடனும் ஓத வேண்டும் என்பதன் பக்கம் கவனமூட்டியவாறு அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

எனவே, திருக்குர்ஆன் முந்தைய வேதங்கள் மற்றும் நபிமார்கள் மீது கருணை செய்துள்ளது என்பதனை நினைவிற் கொள்ள வேண்டும். அதாவது கதைகளின் வடிவில் இருந்த அவர்களின் போதனைகளை அறிவார்ந்த வடிவில் திருக்குர்ஆன் அவற்றை வழங்கி இருக்கின்றது. நான் மெய்யாகவே

கூறுகின்றேன்; திருக்குர்ஆனை படிக்காத வரை எந்தவொரு நபரும் அந்த கதைகளிலிருந்து இரட்சிப்பு பெற முடியாது. ஏனெனில்,

اِنَّهٗ لَقَوْلٌ فَصْلٌ ۙ وَّمَا هُوَ بِالْهَزْلِ

(அத்தாரிக்: 14- 15) என்பது திருக்குர்ஆனுடைய சிறப்பாக மட்டுமே இருக்கின்றது. இது தீர்ப்பு வழங்கக் கூடிய கூற்றாகும். இதில் வீணான விஷயங்கள் எதுவும் இல்லை.

அது விருந்து உபசரிப்பு செய்யக் கூடியதும், ஒளியும், பரிந்துரை செய்யக் கூடியதும், கருணையும் ஆகும். எந்த மக்கள் திருக்குர்ஆனை கதைகளாக கருதி ஓதுகின்றனரோ அவர்கள் திருக்குர்ஆனை ஓதவேயில்லை. மாறாக, அதனை அவமரியாதை செய்கின்றனர். நமது எதிரிகள் ஏன் நம்மை எதிர்ப்பதில் இந்த அளவிற்கு வேகம் காட்டுகின்றனர்? திருக்குர்ஆன் முற்றிலும் ஒளியும், மதி நுட்பமானதும், ஞானம் மிக்கதும் ஆகும் என்று இறைவன் கூறியுள்ளது போன்று நாம் திருக்குர்ஆனை காட்ட விரும்புகின்றோம் என்பதனால் மட்டுமே அவர்கள் நம்மை எதிர்க்கின்றனர். திருக்குர்ஆனிற்கு ஒரு சாதாரண கதையை விட அதிக முக்கியத்துவம் கொடுக்கக் கூடாது என்று அவர்கள் முயற்சி செய்கின்றனர். நம்மால் அதனை பொறுத்துக் கொள்ள முடியாது.

திருக்குர்ஆன் ஓர் உயிருள்ள வேதம் மற்றும் ஒளிமயமான வேதம் ஆகும் என்பதை இறைவன் தனது அருளினால் நமக்கு தெளிவுபடுத்தியுள்ளான். எனவே நாம் அவர்களின் எதிர்ப்பை ஏன் பொருட்படுத்த வேண்டும்? சுருக்கமாக, என்னுடன் தொடர்பு வைத்துள்ள அந்த மக்களுக்கு நான் மீண்டும், மீண்டும் அறிவுரை செய்கின்றேன்; இறைவன் இந்த ஜமாஅத்தை உண்மைத்துவங்களை வெளிப்படுத்துவதற்காக நிறுவியுள்ளான்.

ஏனெனில், இதனை தவிர்த்துவிட்டு செயல் வாழ்க்கையில் எந்த வெளிச்சமும், ஒளியும் உருவாக முடியாது. மேலும், இறைவன் இந்தப் பணிக்காக என்னை நியமித்துள்ளது போன்று செயல் ரீதியிலான உண்மையின் மூலமாக இஸ்லாத்தின் சிறப்பு உலகத்திற்கு வெளிப்பட வேண்டும் என்று நான் விரும்புகின்றேன். எனவே திருக்குர்ஆனை அதிகமாக ஓதுங்கள். ஆனால் வெறும் கதையாக நினைத்து ஓதாதீர்கள். மாறாக, ஒரு தத்துவம் என்று கருதி (ஓதுங்கள்).( மல்ஃபூஸாத், தொகுதி 3, பக்கம் 155- 1984-ம் ஆண்டு பதிப்பு)

எனவே திருக்குர்ஆனை புரிவது மிகவும் அவசியம் ஆகும். ஏராளமான அஹ்மதிகள் பெரும்பாலும் கேள்வி கேட்கின்றனர். அவர்கள் திருக்குர்ஆனை சிந்தித்து படித்தால் பின்னர் அங்கேயே அவர்களுக்கு அவர்களுக்குரிய பதிலும் கிடைத்து விடும். பல்வேறு நிகழ்ச்சிகளில் திருக்குர்ஆன் தொடர்பாக விஷயங்கள் பேசப்படும்போது அதனைக் கேட்கக் கூடியவர்கள் மிகவும் தாக்கமடைந்து விடுகின்றனர். இஸ்லாத்தின் சிறப்புகளை ஒப்புக் கொண்டு விடுகின்றனர். எனவே நம்பிக்கையுடன் ஒவ்வோர் அஹ்மதியும் திருக்குர்ஆனை பயன்படுத்த வேண்டும். எங்கு இது நமது தர்பியத்திற்கான வழிகாட்டியோ அங்கு அந்நியர்களின் ஆட்சேபனைகளுக்கு பதில் அளிப்பதற்கும் ஒரு வலிமையான ஆயுதம் ஆகும்.

உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்கக் கூடியவருக்கு எல்லாவற்றையும் விட முக்கியத்துவம் வாய்ந்த விஷயம் இதுவாகும். அதாவது, அவருக்கு இறைவனுடனும் தொடர்பு உருவாக வேண்டும். கட்டளைகள் தெரிய வந்துவிட்டால் பின்னர் அந்தக் கட்டளைகளை வழங்கக் கூடியவனுடன் தொடர்பு இருக்க வேண்டும். அதாவது, இறைவனுடன் தொடர்பு இருக்க வேண்டும். மேலும், இந்த தொடர்பு இறைவணக்கத்தின் மூலமாக உருவாகின்றது. மேலும், இஸ்லாத்தில் இறை வணக்கத்திற்கான சிறந்த வழிமுறை தொழுகையாகும். தமது தொழுகையின் நிலை எப்படி உள்ளது? என்று ஒவ்வோர் அஹ்மதியும் ஆய்வு செய்ய வேண்டும். நமது இந்த நிலை சரியானதாக இருந்தால் மேலும் அல்லாஹ்வுடன் இவ்வாறான தொடர்பு ஏற்பட்டு விட்டால் பின்னர் அந்த நிலையில் மட்டுமே நமக்கு உண்மையான மகிழ்ச்சி கிடைக்கும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: எனது கோட்பாடு என்னவென்றால், எவர் துன்பங்களிலிருந்து தப்பித்துக் கொள்ள வேண்டுமோ அவர் இறைவனுடன் மறைமுகமாக சமாதானம் செய்து கொள்ளட்டும். மேலும், (முன்பிருந்த) அந்த நபர் இல்லை என்பதை அவர் சுயமே உணர்ந்து கொள்ளும் அளவில் தம்மிடம் மாற்றத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இறைவன் திருக்குர்ஆனில் கூறுகின்றான்:

اِنَّ اللّٰهَ لَا يُغَيِّرُ مَا بِقَوْمٍ حَتّٰى يُغَيِّرُوْا مَا بِاَنْفُسِهِمْ

(அர் ரஅது: 12)

பொருள்: நிச்சயமாக ஒரு சமுதாயம் தனது மனதிலும் உள்ளத்திலும் இருக்கின்றவற்றை சுயமே மாற்றிக் கொள்ளாத வரை அல்லாஹ் எந்தவொரு சமுதாயத்தின் நிலையையும் மாற்றுவதில்லை.

கூறினான்: உண்மையான மார்க்கத்தின் வேர் இறைவன் மீதான நம்பிக்கை ஆகும். உண்மையான இறையச்சம் இருக்க வேண்டும்; இறையச்சம் இருக்க வேண்டும் என்பதை இறைவன் மீதான நம்பிக்கை விரும்புகின்றது.

இறையச்சமுடையவரை அல்லாஹ் ஒருபோதும் வீணாக்குவதில்லை. அவன் விண்ணிலிருந்து அவருக்கு உதவி செய்கின்றான். வானவர்கள் அவருக்கு உதவி செய்கின்றனர். இறையச்சமுடையவரிடமிருந்து அற்புதம் வெளிப்படுகின்றது என்பதை விட வேறு என்ன இருக்க முடியும்? மனிதன் இறைவனுடன் முழுமையான தூய்மையை மேற்கொண்டு விட்டால் மேலும் இறைவனது அதிருப்திக்கு காரணமான அந்த செயல்களையும், அமல்களையும் மனிதன் விட்டுவிட்டால் பின்னர் ஒவ்வொரு பணியும் அருளுடன் தீர்க்கப்படும் என்பதை மனிதன் புரிந்து கொள்ளட்டும். நமது ஈமானோ விண்ணின் நடவடிக்கைகளையே சார்ந்துள்ளது.

விண்ணிலிருந்து பணி நடந்தால் மட்டுமே பணி நடக்கும். வேறு எந்த வழிமுறையும் இல்லை.

இறைவன் ஒருவருக்காக ஆகிவிட்டால் பின்னர் முழு உலகமும் கூட தனது எதிர்ப்பால் எதனையும் சீர்கெடுக்க முடியாது. எவரை இறைவன் பாதுகாப்பாக வைக்க விரும்புவானோ அவருக்கு யார் பாதிப்பை ஏற்படுத்த முடியும்?

எனவே இறைவன் மீது நம்பிக்கை வைப்பது அவசியம் ஆகும்.

அன்னார் (அலை) கூறினார்கள்: எனவே இறைவன் மீது நம்பிக்கை வைப்பது அவசியம் ஆகும். மேலும் அந்த நம்பிக்கையும் எப்படி இருக்க வேண்டும் என்றால், (இறைவனைத் தவிர மற்ற) எல்லா பொருளின் மீதும் முற்றிலும் நம்பிக்கை இழந்து விட வேண்டும். காரணிகள் அவசியம் ஆகும். ஆனால், காரணிகளை உருவாக்குவதும் கூட இறைவனின் கரங்களில் தானே இருக்கின்றது. அவன் எல்லா காரணிகளையும் உருவாக்க முடியும். எனவே காரணிகளின் மீதும் நம்பிக்கை கொள்ளாதீர்கள். மேலும், இந்த நம்பிக்கை எவ்வாறு உருவாகின்றது? என்றால், தொழுகைகளை பேணுங்கள்; மேலும் தொழுகைகளில் துஆக்கள் செய்வதை பேணுங்கள். எல்லாத் தடுமாற்றங்களிலிருந்தும் தப்பித்துக் கொள்ள வேண்டும். மேலும், புதிய வாழ்விற்கான அடித்தளத்தை அமைத்துக் கொள்ள வேண்டும். இதனை நினைவிற் கொள்ளுங்கள்! இறைவன் அன்பிற்குரியவனாக இருப்பதைப் போன்று நமது அன்பர்கள் கூட நண்பர்களாக இருப்பதில்லை. அவன் திருப்தி அடைந்து விட்டால் பின்னர் முழு உலகமும் திருப்பதி அடைந்து விடும்.

அவன் ஒருவர் மீது திருப்தியை வெளிப்படுத்தி விட்டால் எதிர்மறையான காரணியைக் கூட நேராக்கி விடுகின்றான்.

சீர்கெட்ட பணியும் கூட சீராகிவிடுகின்றது.

தீங்கிழைக்கக் கூடியதை அவன் நன்மை பயப்பதாக ஆக்கிவிடுகின்றான். இதுவே அவனது இறைத் தன்மை ஆகும். இந்த விஷயமும் நினைவிற் கொள்ளத்தக்கது ஆகும். அதாவது எவருக்காக துஆ செய்யப்படுகின்றதோ அவர் சுயமே தமது திறமைகளில் மும்முரமாக இருப்பது அவருக்கு அவசியம் ஆகும்.

துஆ செய்யும்படி கூறுகின்றனர். துஆவுடன் தம்மை சீர்திருத்துவதன் பக்கம் தங்களை அவர்கள் மும்முரமாக ஆக்கிக் கொள்ள நேரிடும்.

அவர் வேறோர் அம்சத்தின் அடிப்படையில் இறைவனை கோபப்படுத்திவிட்டால் பின்னர் அவர் துஆவின் தாக்கத்தினை தடுப்பவராக ஆகிவிடுகின்றார். முறையான வழிமுறையில் காரணிகளை பயன்படுத்திக் கொள்வது பாவம் இல்லை. ஆனால், இறைவனுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும். இறைவனின் கோபத்திற்கு காரணியாக அமையும் காரணிகளை மேற்கொள்ளக் கூடாது. (மல்ஃபூஸாத், தொகுதி 2, பக்கம் 184- 185, 2022-ம் ஆண்டு பதிப்பு)

தொழுகையில் இன்பம் கிடைக்காததற்கான காரணம் மற்றும்

---

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

அதற்கான சிகிச்சையை எடுத்துரைத்தவாறு அன்னார் (அலை) கூறினார்கள்:

சுருக்கமாக, நான் பார்க்கின்றேன். மக்கள் தொழுகைகளில் சோம்பேறிகளாகவும் கவனமற்றவர்களாகவும் ஏன் இருக்கின்றனர்? என்றால், இறைவன் தொழுகையில் வைத்துள்ள அந்த இன்பங்களையும், மகிழ்ச்சியையும் அவர்கள் அறிவதில்லை.இதுவே மாபெரும் காரணம் ஆகும். பின்னர் நகரங்களிலும், கிராமங்களிலும் இன்னும் அதிகமான சோம்பலும், கவனமற்றத் தன்மையும் இருக்கின்றது. எனவே ஐம்பதில் ஒரு பகுதியினர் கூட சுறுசுறுப்புடனும், உண்மையான நேசத்துடனும் தமது உண்மையான எஜமானனின் சமூகத்தில் சிரம் பணிவதில்லை. பின்னர் அவர்களுக்கு அந்த இன்பங்களைப் பற்றி ஏன் தெரிவதில்லை? மேலும் ஒருபோதும் அவர்கள் அந்த இன்பத்தை ஏன் ருசிப்பதில்லை?என்ற கேள்வி எழுகின்றது.மற்ற மார்க்கங்களில் இதுபோன்ற கட்டளைகள் இல்லை. சிலமுறை இவ்வாறு நிகழ்கின்றது. அதாவது, நாம் நமது பணிகளில் மூழ்கி விடுகின்றோம். மேலும், தொழுகைக்கு அழைப்பவர் பாங்கு கொடுத்து விடுகின்றார். பின்னர் அவர்கள் அதனைக் கேட்பதைக் கூட விரும்புவதில்லை. அதாவது பாங்கு கொடுக்கப்பட்டு விட்டது. தொழுகைக்காக செல்ல வேண்டும் என்று கூட அவர்களின் உள்ளம் வருந்துவதில்லை. இதுபோன்ற மக்கள் மிகவும் பரிதாபத்திற்குரியவர்கள் ஆவர். சில மக்கள் இங்கு இப்படியும் இருக்கின்றனர். அதாவது,அவர்களின் கடைகளைப் பார்த்தீர்கள் என்றால் அவையோ பள்ளிவாசல்களுக்கு கீழே தான் இருக்கின்றன. ஆனால், ஒருபோதும் (பள்ளி வாசலில்) சென்று தொழுகைக்காக நிற்பது கூட கிடையாது. எனவே நான் இதனைக் கூற விரும்புகின்றேன். கனிகள் மற்றும் ஏனையப் பொருட்களில் வகை வகையான இன்பங்களை வழங்கியிருப்பதைப் போன்று தொழுகை மற்றும் இறை வணக்கத்திலும் ஓர் இன்பத்தை சுவைக்கச் செய்வாயாக! என்று இறைவனிடம் மிகவும் வேதனையுடனும், ஓர் உத்வேகத்துடனும் துஆ செய்ய வேண்டும்.

உண்ட உணவு நினைவிருக்கின்றது. பாருங்கள்! ஒரு நபர் ஓர் அழகை ஓர் இன்பத்துடன் பார்க்கின்றான். அப்போது அது அவருக்கு மிகவும் நன்றாக நினைவில் இருக்கும். பின்னர் ஒரு மோசமான உருவம் கொண்ட மற்றும் வெறுக்கத் தக்க பொருளைப் பார்க்கின்ற போது பின்னர் அவருடைய அனைத்து நிலையும் உருவமாக அவருக்கு முன்னால் வந்து விடுகின்றது. ஆயினும், எந்தத் தொடர்பும் இல்லையென்றால் பின்னர் எதுவும் ஞாபகம் இருப்பதில்லை.

இதேபோன்று தொழாதவர்களைப் பொருத்த வரை தொழுகை அவர்களுக்கு ஒரு அபராதமாகும். அதிகாலையில் எழுந்து குளிரில் வுளூ செய்துவிட்டு கனவுகளையும், சுகமான தூக்கத்தையும் விட்டு விட்டு பல வகையான சுகபோகங்களை இழந்து விட்டு தொழுவது அவர்களுக்கு சுமையாக இருக்கின்றது.

அசல் விஷயம் என்னவென்றால், அவர் கவனமற்றவராக இருக்கின்றார். தொழுகையில் இருக்கின்ற அந்த இன்பத்தையும், மகிழ்ச்சியையும் அவர் புரியவில்லை; அவர் அறியவில்லை. பின்னர் எப்படி தொழுகையில் இன்பம் கிடைக்க முடியும்? நான் பார்க்கின்றேன்; ஒரு குடிகாரர் மற்றும் போதைக்கு அடிமையானவருக்கு போதை ஏறாதபோது பின்னர் மேலும் மேலும் குடித்துக் கொண்டே செல்கின்றார். எந்த அளவிற்கு என்றால் அவருக்கு ஒரு வகையான போதை வந்து விடுகின்றது. அறிவுடைய மற்றும் கண்ணியமான மக்கள் இந்த விஷயத்திலிருந்து பயனடைய முடியும். அது இவ்வாறு ஆகும். அதாவது, தொழுகையில் நிலைத்திருக்க வேண்டும். தொடர்ந்து முறையாக தொழுது வர வேண்டும். எந்த அளவிற்கு என்றால் அவருக்கு இன்பம் வந்து விடும் வரை அவர் தொழுது கொண்டே செல்ல வேண்டும்..எவ்வாறு ஒரு குடிகாரரின் மூளையில் ஓர் இன்பம் இருக்குமோ அதனைப் பெறுவதே அவரது இலக்காக இருக்குமோ அதேபோன்று மனதில் அனைத்து ஆற்றல்களின் கவனமும் தொழுகையில் இன்பத்தை பெற வேண்டும் என்பதில் இருக்க வேண்டும். மேலும், பின்னர் ஒரு தூய்மை மற்றும் உத்வேகத்துடன் குறைந்தபட்சம் அந்தக் குடிக்காரரின் நிம்மதியின்மை, பரிதவிப்பு மற்றும் வேதனையைப் போன்றாவது தொழுகையில் அந்த இன்பம் கிடைத்து விட வேண்டும் என்ற ஒரு துஆ உருவாக வேண்டும். நான் கூறுகின்றேன். மேலும், மெய்யாகவே கூறுகின்றேன்; நிச்சயமாக, நிச்சயமாக அந்த இன்பம் கிடைத்து விடும். பின்னர் தொழுகின்ற நேரத்தில் அந்த பயன்களைப் பெறுவதும் நோக்கமாக இருக்க வேண்டும். மேலும், இஹ்ஸான் என்ற அந்த நிலையை கருத்தில் கொள்ள வேண்டும்.

إِنَّ الْحَسَنٰتِ يُذْهِبْنَ السَّيِّاٰتِ

(ஹூத்:115). நன்மைகள் தீமைகளை அழித்து விடுகின்றன. எனவே அந்த நன்மைகளையும், இன்பத்தையும் உள்ளத்தில் தாங்கியவாறு ஸித்தீக்குகள் மற்றும் நல்லடியார்களின் அந்தத் தொழுகையை வழங்குவாயாக! என்று துஆ செய்ய வேண்டும்.

إِنَّ الْحَسَنٰتِ يُذْهِبْنَ السَّيِّاٰتِ

அதாவது நன்மைகள் அல்லது தொழுகை தீமைகளை அகற்றுகின்றது என்று அல்லாஹ் கூறியுள்ளான் அல்லது பிறிதோரிடத்தில் தொழுகை வெட்கக்கேடான விஷயங்களிலிருந்தும், தீமைகளிலிருந்தும் பாதுகாக்கின்றது என்று அல்லாஹ் கூறியுள்ளான். மேலும் நாம் பார்க்கின்றோம்; அதாவது சில மக்கள் தொழுகைகளை நிறைவேற்றி வந்தபோதிலும் தீமைகள் செய்கின்றனரே! (என்ற கேள்வி எழுகின்றது). இதற்கான பதில் இதுவாகும். அதாவது அவர்கள் தொழுகின்றார்கள் தான். ஆனால் அவர்கள் உயிரோட்டத்துடனும், உண்மையுடனும் தொழவில்லை. அவர்கள் வெறும் சடங்கு சம்பிரதாயமாகவும், பழக்கதோஷமாகவும் குனிந்து எழுகின்றனர். அவர்களின் ஆன்மா மரணித்திருக்கின்றது. அல்லாஹ் அவற்றிற்கு ஹஸ்னாத் எனும் நன்மைகள் என்று பெயரிடவில்லை. மேலும், இங்கு ஹஸ்னாத் என்ற சொல்லை வைத்துள்ளான். பொருள் அதுவே என்றபோதிலும் அஸ்ஸலாத் என்ற பெயரை வைக்கவில்லை. அதற்கான காரணம் இதுவே ஆகும். அதாவது, தன்னுள் ஓர் உண்மையான ஆன்மாவைக் கொண்டுள்ள அந்தத் தொழுகை தீமைகளை அகற்றுகின்றது; மேலும் அருட்களின் தாக்கம் அதனுள் இருக்கின்றது என்ற தொழுகையின் சிறப்பு, அழகு மற்றும் பொலிவு ஆகியவற்றின் பக்கம் சுட்டிக் காட்ட வேண்டும் என்பதற்காக வைக்கப்பட்டுள்ளது.

அந்தத் தொழுகை நிச்சயமாக தீமைகளை அகற்றுகின்றது. தொழுகை என்பது அமர்ந்தோம்; முடித்தோம் என்பதன் பெயர் அல்ல.ஓர் இன்பத்தையும், மகிழ்ச்சியையும் தன்னுள் கொண்டுள்ள அந்த துஆவே தொழுகையின் சாறும் ஆன்மாவும் ஆகும். (மல்ஃபூஸாத், தொகுதி 1, பக்கம் 162- 164, 1984-ம் ஆண்டு பதிப்பு)

எனவே நாம் தொழுகைகளில் இன்பத்தைப் பெறுகின்றோமா? நாம் காரணிகளின் மீது மட்டுமே முழுமையான நம்பிக்கை கொண்டிருக்கின்றோமா? என்று நாம் நம்மை ஆய்வு செய்ய வேண்டிய அவசியம் இருக்கின்றது. நாம் தொழுகைகளை பாதுகாக்கக் கூடியவர்களாக இருக்கின்றோம் என்றால் பின்னர் நாம் பைஅத்திற்கான உரிமையை செலுத்துபவர்களாக இருக்கின்றோம்; நமது நோக்கத்தை முழுமை செய்யக் கூடியவர்களாக இருக்கின்றோம். இல்லையென்றால் மிகவும் கவலை கொள்ளத் தக்க நிலையாகும்.

அடுத்து, அறிவிலும், ஞானத்திலும் முன்னேற்றமடைவதற்கும் மற்றும் ஷைத்தானின் தாக்குதல்களிலிருந்து தப்பிப்பது தொடர்பாகவும் கவனமூட்டியவாறு, ஆன்மிகத் தலைவர் மற்றும் சீடருக்குமான தொடர்புகள் எவ்வாறு இருக்க வேண்டும்? என்று அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

ஆன்மிகத் தலைவர் மற்றும் ஆன்மிகச் சீடருக்கான தொடர்புகளை ஆசிரியர் மற்றும் மாணவருக்கான உதாரணத்தின் மூலம் புரிந்து கொள்ள வேண்டும். ஆசிரியரிடமிருந்து மாணவர் பயன் பெறுவததைப் போன்று ஆன்மிக சீடர் தனது ஆன்மிகத் தலைவரிடமிருந்து பயன் பெற வேண்டும். ஆயினும், மாணவன் ஆசிரியருடன் தொடர்பு மட்டும் கொண்டிருக்கின்றான் ஆனால், தமது கல்வியில் பாதங்களை முன்னோக்கி வைக்கவில்லையென்றால் பின்னர் அவரால் பயன் பெற முடியாது. இதுவே ஆன்மிக சீடரின் நிலையாகும். எனவே இது குறித்த தொடர்பை உருவாக்கிக் கொண்டு தமது ஞானத்தையும், அறிவையும் அதிகரிக்க வேண்டும். உண்மையைத் தேடுபவர் ஓர் இடத்தை சென்றடைந்து பின்னர் ஒருபோதும் நின்று விடக் கூடாது. இல்லையென்றால் சபிக்கப்பட்ட ஷைத்தான் வேறுபக்கம் கொண்டு சென்றுவிடுவான். தேங்கி கிடக்கும்

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும்
என்னை வணங்குவதற்காகவே
படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில்
குறைவாகவே
துயில் கொண்டனர். (54:18)

A. Shamsul Alam
(Gen.Sec. Melapalayam)

தண்ணீரில் அசுத்தங்கள் உருவாகிவிடுவதைப் போன்று நிலை மாறிவிடும்.

**தேங்கி நிற்கும் தண்ணீரில் துர்நாற்றம் உருவாகிவிடுகின்றது. புழுக்கள் உருவாகிவிடுகின்றன. பல வகையான நோய்களுக்கு காரணியாக ஆகிவிடுகின்றது. ஓரிடத்தில் நின்று விட்ட மனிதனின் நிலையும் இதேபோன்றுதான் இருக்கின்றது. எனவே நமது பாதங்கள் முன்னேறிக் கொண்டே செல்ல வேண்டும்.**

அன்னார் (அலை) கூறினார்கள்: இதேபோன்று நம்பிக்கையாளர் தமது முன்னேற்றங்களுக்காக முயற்சி செய்யவில்லையென்றால் பின்னர் அவர் விழுந்து விடுவார். எனவே நற்பேறு பெற்றவர்களின் கடமை என்னவென்றால் அவர் மார்க்கத்தை தேடுவதில் ஈடுபட்டிருக்க வேண்டும். நமது நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை விட முழுமையான மனிதர் உலகில் தோன்றவில்லை. ஆயினும்,

رَبِّ زِدْنِيْ عِلْمًا

என்ற துஆவை செய்யும்படி அன்னாருக்கும் போதனை வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறிருக்க, தனது ஞானத்திலும், அறிவிலும் முழுமையாக நம்பிக்கைக் கொண்டு எவரால் நிற்க முடியும்? மேலும் இனி முன்னேற்றங்களுக்கான தேவை இல்லை என்று உணருபவர் எவர் கருத முடியும்? மனிதன் தனது அறிவிலும், ஞானத்திலும் முன்னேற்றமடைய, முன்னேற்றமடைய தீர்வு காணப்பட வேண்டிய விஷயங்கள் இன்னும் ஏராளம் இருக்கின்றது என்பதை அவர் அறிந்து கொண்டே செல்வார். சில விஷயங்களை அவர்கள் துவக்கப் பார்வையில் அக்லீதஸ் எனும் வரைபடங்களை வீணானதாக மட்டுமே கருதும் அந்தக் குழந்தைகளைப் போன்று பார்க்கின்றனர்.

அதவாது ஜாமின்ட்ரீ வடிவங்கள் இருக்கின்றன அல்லது அறிவியல் அறிஞர்கள் சார்பாக உருவாக்கப்படும் பல்வேறு டயாகிராம் (Diagram) இருக்கின்றது. அவற்றை குழந்தைகள் வெறும் கோடுகளாகவே கருதுகின்றனர். அதற்கு எந்த மதிப்பும் கிடையாது என்று அவர்கள் கருதுகின்றனர்.

எனவே அன்னார் (அலை) கூறினார்கள்: அப்படிப்பட்ட மக்கள் (இந்தக்) குழந்தைகளைப் போன்றவர்களே ஆவர். இந்த விஷயங்களை முற்றிலும் வீணானதாக கருதி வந்தனர்.

கூறினார்கள்: ஆனால், இறுதியில் அதே விவகாரம் அவர்களுக்கு உண்மையின் வடிவில் அவர்களுக்கு தென்படுகின்றது. அவர்கள் பெரியவர்களாக ஆனபோது அறிவு வந்ததும் இதிலோ பெரும் வேலைக்கான விஷயங்கள் இருக்கின்றனவே என்பது தெரிய வரும். எனவே, தமது அந்தஸ்தை மாற்றிக் கொள்வதுடனேயே அறிவையும் அதிகரிப்பதற்கு ஒவ்வொரு விஷயத்தையும் முழுமை செய்ய வேண்டும். நீங்கள் ஏராளமான வீணான விஷயங்களை விட்டு விட்டு இந்த ஜமாஅத்தை ஏற்றுக் கொண்டுள்ளீர்கள்.

அன்னார் (அலை) கூறினார்கள்: நீங்கள் ஏராளமான வீணான விஷயங்களை விட்டு விட்டு இந்த ஜமாஅத்தை ஒப்புக் கொண்டுள்ளீர்கள். நீங்கள் இது தொடர்பான முழுமையான அறிவையும், அகப்பார்வையையும் பெறமாட்டீர்கள் என்றால் பின்னர் இதனால் உங்களுக்கு என்ன பயன் விளைந்தது? உங்களது உறுதியிலும், இறை ஞானத்திலும் ஆற்றல் எவ்வாறு பிறக்கும்? சிறுசிறு விஷயங்களில் சந்தேகங்களும், ஐயங்களும் உருவாகிவிடும் என்றால் இறுதியில் பாதம் தடுமாறிவிடுவதற்கான அபாயம் உள்ளது. (மல்ஃபூஸாத், தொகுதி 3, பக்கம் 193, 1984-ம் ஆண்டு பதிப்பு)

எனவே சில மக்களுடைய ஈமான் தடுமாற்றம் அடைகின்றது என்றால் அதற்குக் காரணம் அவர்கள் அறிவில் முன்னேற்றம் அடைவதில்லை அல்லது தான்றோன்றித் தனமான சுய விளக்கங்களையும், விரிவுரைகளையும் கொடுக்கின்றனர் என்பதே ஆகும். அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் புத்தகங்களை வாசிப்பது இல்லை.

நாம் மார்க்க அறிவின் பக்கம் கவனம் செலுத்தினால் பின்னர் இறைவனின் இருப்பின் மீதான ஈமானிலும் முன்னேற்றம் அடைவோம். மேலும் இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத்தின் உண்மையின் மீதான ஈமானிலும் நாம் முன்னேற்றமடைபவர்களாக இருப்போம். நமது பிள்ளைகளின் ஈமானையும் பாதுகாக்கக் கூடியவர்களாக நாம் இருப்போம். மேலும், இதன் பக்கம் அதிகம் கவனம் செலுத்துவதற்கான அவசியம் உள்ளது.

அன்னார் (அலை) கூறினார்கள்: என்னிடம் பைஅத் செய்துள்ளீர்கள் என்றால் பின்னர் என்னை நீதி நெறி தீர்ப்பவராக ஒப்புக் கொள்ளுங்கள். நான் என்ன விஷயத்தை கூறுவேனோ அதனை இறைவன் மற்றும் அவனது ஒப்புக் கொள்ளப்பட்ட தூதர் (ஸல்) அவர்களின் போதனைக்கு ஏற்பவே கூறுவேன்; அல்லாஹ்வின் சிறப்பான வழிகாட்டலுடனேயே கூறுவேன் என்று நம்பிக்கை வையுங்கள்.

எனவே அன்னார் (அலை) கூறினார்கள்: நீதி நெறி தீர்ப்பவரின் தீர்ப்புகளை கண்ணிய மிகு பார்வையுடன் பார்க்க வேண்டும் என்ற நிலையை உங்களது ஈமானிய நிலையில் உருவாக்குங்கள்.

கூறினார்கள்: **எந்த நபர் ஈமான் கொள்கின்றாரோ அவர் தமது ஈமானில் உறுதி மற்றும் இறைஞானம் என்ற அந்தஸ்து வரை முன்னேற்றம் அடைய வேண்டுமே தவிர அவர் மீண்டும் யூகங்களில் அகப்பட்டுவிட்டுக் கூடாது. நினைவிற் கொள்ளுங்கள்! யூகங்கள் நன்மையளிக்கக் கூடியதாக இருக்க முடியாது.** தப்பெண்ணங்கள் உருவாகின்றன.

اِنَّ الظَّنَّ لَا يُغْنِيْ مِنَ الْحَقِّ شَيْئًا

என்று இறைவனே கூறுகின்றான்.

நிச்சயமாக யூகம் உண்மையின் இடத்தில் எந்த பலனும் அளிப்பதில்லை. உண்மை எல்லா நிலையிலும் உண்மையே ஆகும். (யூனுஸ்: 37)

தப்பெண்ணங்கள் உருவாகுவதால் உண்மை மறைந்து விட முடியாது. நம்பிக்கை என்ற ஒரு விஷயம் எப்படிப்பட்டதென்றால் அது மனிதனை வெற்றி பெறச் செய்து விடும்.

கூறினார்கள்: **உறுதியான நம்பிக்கையின்றி ஒன்றும் நடக்காது. மனிதன் ஒவ்வொரு விஷயத்திலும் தப்பெண்ணம் கொள்ளத் தொடங்கி விட்டால் ஒரு நொடி கூட அவனால் உலகில் கழிக்க முடியாது. நீங்கள் உலகியல் விஷயங்களில் தப்பெண்ணம் கொள்ளத் தொடங்கினால் அங்கிருந்தே உதாரணத்தைக் கண்டு கொள்ளுங்கள்.** இதில் விஷம் கலக்கப்பட்டிருக்குமோ என்று சந்தேகித்தால் பின்னர் அவனால் தண்ணீர் கூட அருந்த முடியாது. கடை வீதிகளின் பொருட்களில் அழிக்கக் கூடிய ஏதாவது பொருள் இருக்குமோ என்று சந்தேகித்தால் அவற்றை உண்ண முடியாது. பின்னர் எப்படி அவர் உயிர் வாழ முடியும்? இது ஒரு பெரும் உதாரணம் ஆகும்.

எவர்களுக்கு சந்தேக நோய் இருக்குமோ அவர்கள் இவ்வாறு யோசித்து யோசித்து தமது வாழ்வை வீணாக்கிக் கொள்கின்றனர். இப்படிப்பட்ட சந்தேகங்கள் தோன்றக் கூடாது என்ற விஷயத்தையே ஆன்மிக விவகாரங்களிலும் பார்க்க வேண்டும்.

அன்னார் (அலை) கூறினார்கள்: இதேபோன்று மனிதன் ஆன்மிக விவகாரங்களிலும் இதிலிருந்து பயனடைய முடியும். தற்போது நீங்கள் சுயமே சிந்தித்துக் கொள்ளுங்கள்;நீங்கள் எனது கரத்தில் பைஅத் செய்துள்ளீர்களா? என்பதை உங்களது உள்ளத்தில் தீர்மானித்துக் கொள்ளுங்கள். மேலும் என்னை வாக்களிக்கப்பட்ட மஸீஹ் என்றும் நீதி நெறி தீர்ப்பவராகவும் ஒப்புக் கொண்டுள்ளீர்கள் என்றால் பின்னர் இவ்வாறு ஒப்புக் கொண்ட பிறகு எனது ஒரு தீர்ப்பு அல்லது செயலில் உங்களது உள்ளத்தில் நெறுடல் அல்லது துன்பம் ஏற்படுகின்றது என்றால் பின்னர் நீங்கள் உங்களது ஈமானைக் குறித்து கவலைக் கொள்ளுங்கள். ஐயங்களாலும், சந்தேகங்களாலும் நிரம்பியிருக்கின்ற அந்த ஈமான் எந்த நல்விளைவையும் உருவாக்கக் கூடியதாக இருக்காது. ஆயினும், நீங்கள் உண்மையான உள்ளத்துடன் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் உண்மையான நீதி நெறி தீர்ப்பவர் என்று ஒப்புக் கொண்டுள்ளீர்கள் என்றால் பின்னர் அவரது கட்டளை மற்றும் செயலுக்கு முன்னால் உங்களது ஆயுதங்களை கீழே போட்டுவிடுங்கள். மேலும் அவரது தீர்ப்புகளை மிகுந்த கண்ணியத்துடன் பாருங்கள். அப்போதுதான் நீங்கள் இறைத் தூதர் (ஸல்) அவர்களின் தூய விஷயங்களுக்கு கண்ணியமும் மகத்துவமும் வழங்கக் கூடியவராக திகழ்வீர்கள். இறைத் தூதரின் சாட்சியம் போதுமானதாகும். அவர் உங்களது இமாம் ஆக இருப்பார்; அவர் நீதி நெறி தீர்ப்பவராக இருப்பார் என்று அன்னார் (ஸல்) ஆறுதல் நல்குகின்றார்கள். இதன் மூலம் கூட மன நிறைவு ஏற்படவில்லையென்றால் பின்னர் எப்போது ஏற்படும்? அதாவது, ஈமானும் இருந்து இதயத்தின் சில மூலைகளில் தப்பெண்ணங்களும் இருக்கின்ற இந்த வழிமுறை நல்லதாகவும், அருளுக்குரியதாகவும் ஒருபோதும் இருக்க முடியாது. நான் உண்மையாளர் இல்லையென்றால் பின்னர் செல்லுங்கள்; சென்று, வேறு உண்மையாளரைத் தேடுங்கள். மேலும் உறுதியாக புரிந்து கொள்ளுங்கள். தற்போது வேறு எந்த உண்யைாளரும் உங்களுக்கு கிடைக்க முடியாது. மேலும், வேறோர் உண்மையாளர் கிடைக்கவில்லையென்றால்; கிடைக்கவும் மாட்டார் பின்னர் நான் உங்களிடம் எனக்கு இறைத் தூதர் (ஸல்) அவர்கள் எனக்கு வழங்கியுள்ள உரிமையை

கேட்கின்றேன். எந்த மக்கள் என்னை நிராகரித்துள்ளார்களோ மேலும் என் மீது ஆட்சேபனை செய்கின்றார்களோ அவர்கள் என்னை அடையாளம் கண்டு கொள்ளவில்லை. மேலும் எவர்கள் என்னை ஒப்புக் கொண்டு விட்டார்களோ அவர்கள் அதன் பின்னரும்(உள்ளத்தில்) ஆட்சேபனை கொண்டுள்ளனர் என்றால் பின்னர் அவர்கள் அதிகம் துர்பாக்கியசாலிகள் ஆவர். ஏனெனில், அவர்கள் கண்ட பிறகும் குருடர்களாக இருக்கின்றனர். அசல் விஷயம் என்னவென்றால், சமகாலத்தில் இருப்பதும் கண்ணியத்தை குறைத்து விடுகின்றது. எனவே தான் ஹஸ்ரத் மஸீஹ் (அலை) கூறுகின்றார்கள்: நபி தமது நாட்டைத் தவிர வேறெங்கும் கண்ணியக் குறைவிற்கு ஆளாகுவதில்லை. இதிலிருந்து, அவர்களுக்கு தமது நாட்டின் மக்களின் மூலமாக என்னென்ன துன்பங்களையும், துயரங்களையும் சந்திக்க நேரிட்டது என்பது தெரிய வருகின்றது. எனவே நபிமார்களுடன் ஒரு சுன்னத் தொடர்ந்து வருகின்றது. நாம் அதிலிருந்து எவ்வாறு விலகியவராக இருக்க முடியும்? நபிமார்களுக்கு எதிர்ப்பு ஏற்படுகின்றது.நம்முடனும் நிகழ்ந்து கொண்டிருக்கின்றது என்றால் அது ஒன்றும் பெரிய விஷயம் இல்லை.

எனவே நமது எதிரிகளிடமிருந்து நமக்கு என்னவெல்லாம் கேட்க நேரிடுகின்றதோ அது இதே சுன்னத்திற்கு ஏற்புடையதாக உள்ளது.

مَا يَأْتِيْهِمْ مِّنْ رَّسُوْلٍ اِلَّا كَانُوْا بِهٖ يَسْتَهْزِءُوْنَ

அவர்களிடம் எந்தத் தூதர் வந்தாலும் அவர்கள் அவரை ஏளனமே செய்கின்றனர்.(அல்ஹிஜ்ர்:12)

அந்தோ! இந்த மக்கள் தூய எண்ணத்துடன் என்னிடத்தில் வந்தால் பின்னர் நான் எனக்கு வழங்கியுள்ளதை அவர்களுக்கு காட்டிக் கொடுப்பேன். மேலும், அந்த இறைவன் சுயமே அவர்கள் மீது அருள் பாலிப்பான்; மேலும் அவர்களுக்கு புரிய வைத்துவிடுவான். ஆனால், அவர்களோ கருமித்தனம் மற்றும் பொறாமையை கைகொண்டு விட்டார்கள். இனி நான் அவர்களுக்கு எவ்வாறு புரிய வைப்பேன்!

தற்போதோ நூற்றி முப்பத்தைந்து வருடங்கள் ஆகிவிட்டன ; இந்த மக்கள் அடையாளங்களைக் கண்ட பிறகும் படிப்பினை பெறவில்லை.

அன்னார் (அலை) கூறினார்கள்: மனிதன் உண்மையான உள்ளத்துடன் உண்மையைத் தேடி வரும்போது பின்னர் அனைத்திற்கும் தீர்வுகள் கிடைத்து விடுகின்றன. ஆனால், தீய பேச்சுகள் மற்றும் தீங்கிழைக்கும் எண்ணம் இருக்கும்போது பின்னர் ஒன்றும் நடக்க முடியாது.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: ஹிஜஜுல் கிராமா என்ற ஹதீஸ் நூலில் இப்னு அரபி அவர்களின் ஆதாரத்தின் அடிப்படையில் எழுதப்பட்டுள்ளது: அதாவது வாக்களிக்கப்பட்ட மஸீஹ் வரும்போது அவர் இட்டுக் கட்டுபவர் என்றும், அறிவீனர் என்றும் கூறப்படுவார். அவர் மார்க்கத்தை மாற்றுகின்றார் என்றும் கூட அவரைக் குறித்துக் கூறப்படும். தற்போது அப்படித்தான் நடந்து கொண்டிருக்கின்றது. இதுபோன்ற ஆட்சேபனைகள் என் மீது செய்யப்படுகின்றன. இந்த சந்தேகங்களிலிருந்து மனிதன் எப்போது இரட்சி பெற முடியும்? என்றால் அவன் தனது இஜ்திஹாத் என்ற புத்தகத்தை வீசிவிட்டு மேலும் அதற்குப் பகரமாக இவர் உண்மையாளரா? அல்லது பொய்யரா? என்று சிந்திக்க வேண்டும். நிச்சயமாக சில விவகாரகங்கள் புரிதலுக்கு அப்பாற்பட்டதாக இருக்கின்றன. ஆனால், எந்த மக்கள் தூதர்கள் மீது நம்பிக்கை கொள்கின்றனரோ அவர்கள் அழகிய எண்ணத்துடனும், பொறுமையுடனும், உறுதிப்பாட்டுடனும் ஒரு நேரத்திற்காக காத்திருக்கின்றனர். அப்போது அல்லாஹ் அவர்களுக்கு அசல் உண்மைத்துவத்தை திறந்து (கொடுத்து) விடுகின்றான். இறைத் தூதர் (ஸல்) அவர்களின் காலத்தில் ஸஹாபிகள் கேள்வி கேட்காமல் இருந்து வந்தனர். இன்னும் கூறப்போனால், யாராவது வந்து கேள்வி கேட்கட்டும் என்று காத்திருந்து வந்தனர். அதனால் பயனடைந்து வந்தனர். இல்லையென்றால் சுயமே மௌனமாக சிரம் பணிந்து அமர்ந்து இருந்து வந்தனர். மேலும் கேள்வி கேட்பதற்கு தைரியம் கொண்டிருந்ததில்லை. என்னைப் பொருத்த வரை அசல் மற்றும் ஒப்புக் கொள்ளப்பட்ட வழிமுறை மரியாதை செலுத்த வேண்டும் என்பதே ஆகும். எந்த நபர் ஹஸ்ரத் நபிமார்களுக்குரிய மரியாதைகளை புரிவதில்லையோ மேலும் அதனை மேற்கொள்வதில்லையோ அவர் அழிக்கப்பட்டு விடக் கூடாதே என்ற அச்சம் எனக்கு உள்ளது. (மல்ஃபூஸாத், தொகுதி 3, பக்கம் 75, 1984-ம் ஆண்டு பதிப்பு)

இது அன்னார் (அலை) தமது காலத்தைப் பற்றிக் கூறிக் கொண்டிருக்கும் விஷயங்களாகும். மக்கள் அன்னாருடைய சபைகளில் அமர்ந்திருந்தார்கள். இன்று மக்கள் அன்னாருடைய நூல்களைப் பார்த்தும், படித்தும், மற்றும் சான்றுகளை செவியேற்றும் இதுபோன்ற விஷயங்களையே கூறுகின்றனர்.

அன்னார் (அலை) கூறினார்கள்: எவர் நபியின் மரியாதைகளை அறிவதில்லையோ அவர் அழிந்து விடக் கூடாதே என்ற அச்சமே உள்ளது.

எனவே முஸ்லிம்களோ தங்களது துர்பாக்கியத்தின் காரணமாக இந்த தூதுச் செய்தியை கேட்பதற்கும், புரிவதற்கும் மிகவும் தந்திரமும், தர்க்கமும் செய்கின்றனர். மேலும் அவர்களின் பரிதாபகரமான நிலையும் கூட அவர்களை இதன் பக்கம் கவனமூட்டுவதில்லை. அதாவது என்ன காரணத்தினால் நமக்கு இந்த நிலை ஏற்பட்டுள்ளது; சமுதாயம் என்ற ரீதியில் நாம் என்ன நிலையை அடைந்திருக்கின்றோம்? என்பதன் பக்கம் அவர்கள் கவனம் செலுத்துவதில்லை. காலமும் அப்படியே உள்ளது. மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்புகளும் நிறைவேறிக் கொண்டிருக்கின்றன. எனவே குறைந்தபட்சம் நாம் தோன்றக் கூடிய வாக்களிக்கப்பட்டவரை தேடுவோம் என்ற நிலைக்கு கூட அவர்கள் வருவதில்லை.

அன்னார் (அலை) கூறினார்கள்: நான் இல்லையென்றால் வேறு ஒருவர். எனினும், வேறு எவரும் உங்களுக்கு கிடைக்க மாட்டார். ஆனால், உலகில் வீழ்ந்து அனைத்தையும் மறந்து கொண்டிருக்கின்றனர். ஆனால், அவ்வாறிருந்தபோதிலும் நமது பணி என்னவென்றால், அவர்களை காப்பாற்றுவதற்கு முயற்சி செய்வதும், வாக்களிக்கப்பட்ட மஸீஹின் தூதுச் செய்தியை எல்லாரிடத்திலும் கொண்டு சேர்ப்பதும் ஆகும். மேலும், முஸ்லிம்களிடம் மட்டுமே கூடாது. மாறாக, ஒவ்வொரு நபர் வரையும் கொண்டு சேர்க்க வேண்டும். அவர் ஒரு மதத்துடனும் தொடர்பு வைத்திருந்தாலும் சரியே அல்லது மார்க்கமற்றவராக இருந்தாலும் சரியே இந்த தூதுச் செய்தியை எட்ட வைக்க வேண்டும். தற்போதோ நமக்கு செய்வதற்கு நிறைய பணி இருக்கின்றது. ஜெர்மனியில் நூற்றாண்டுகள் நிறைவடைந்தபோதிலும் நம்மால் ஜெர்மானியர்களுக்கு இஸ்லாத்தின் தூதுச் செய்தியை எட்ட வைக்க முடியவில்லை. எனவே இந்த அடிப்படையிலும் ஆய்வு செய்வது அவசியம் ஆகும்.

இஸ்லாத்தின் தூதுச் செய்தியை எட்ட வைப்பது மற்றும் தப்லீஃக்கின் பக்கம் கவனமூட்டியவாறும் அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: தற்போது நமக்கு இரண்டு பெரும் பணிகள் இருக்கின்றன. ஒன்று இதுவாகும். அதாவது, அரேபியாவில் பிரச்சாரப் பணி நடக்க வேண்டும். இரண்டாவது, ஐரோப்பாவின் மீது சான்றுகளை முழுமை செய்ய வேண்டும். அரேபியர்களின் மீது எதனால் என்றால் அவர்கள் உள்ளார்ந்த உரிமை படைத்திருக்கின்றார்கள். இறைவன் ஒரு ஜமாஅத்தை நிறுவியுள்ளான் என்பதை கூட அறியாத மக்கள் அவர்களில் ஒரு பெரும் பகுதியினராக இருப்பார்கள்.

இன்றும் கூட இது உண்மையாக இருக்கின்றது. முந்தைய காலத்துடன் ஒப்பிடும்போது முயற்சிகள் மிகவும் அதிகரித்து இருக்கின்றன என்றபோதிலும் ஒவ்வோர் அரேபியரிடத்திலும் நமது தூதுச் செய்தி (இன்னும்) சென்றடையவில்லை. தூதுச் செய்தி சென்றடைந்திருக்கின்றது என்றால் எதிரிகளின் மூலமாகவே சென்றடைந்துள்ளது. அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பெயரை ஏளனம் செய்தவாறு காதியானி என்ற பெயரால் நம்மை விளித்து உலகில் அல்லது தமது மக்களிடத்தில் நம்மை அறிமுகம் செய்து வைத்துள்ளனர். மேலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களைக் குறித்து எல்லா வகையான பொய்யான மற்றும் புனையப்பட்டக் கதைகளை மக்களுக்கு கூறி வைத்துள்ளனர். ஒரு தரப்பின் செய்தி அவர்களுக்கு சென்றடைந்துள்ளது. அறிமுகம் இருக்கின்றது என்றால் கூட எதிரிகள் மூலமே இருக்கின்றது. ஆனால், நம் மூலமாக நல்ல முறையில் இன்னும் அறிமுகம் ஏற்படவில்லை.

எவ்வாறு இருப்பினும் அன்னார் (அலை) கூறினார்கள்: நமது கடமை என்னவென்றால், அவர்களுக்கு (தூதுச் செய்தியை) எட்ட வைக்க வேண்டும்.(தூதுச் செய்தியை) எட்ட வைக்கவில்லையென்றால் பின்னர் அது பாவமாக இருக்கும். அதேபோன்று ஐரோப்பியர்களுக்கும் இந்த உரிமை இருக்கின்றது. அதாவது நாம் அவர்களின் தவறுகளை அவர்களுக்கு வெளிப்படுத்த வேண்டும். அவர்கள் ஒரு மனிதனை இறைவனாக்கிக் கொண்டு இறைவனிடமிருந்து தொலைவில் சென்று கிடக்கின்றனர். ஐரோப்பாவின் நிலை இவ்வாறு ஆகிவிட்டது. அதாவது உள்ளபடியே

اَخْلَدَ اِلَى الْاَرْضِ

என்பதை உண்மைப்படுத்தக் கூடியதாக அவர்களின் நிலை ஆகிவிட்டது. அதாவது அவர்கள் பூமியின் பக்கம் குனிந்து விட்டனர். உலகியல் விஷயங்களை தவிர்த்து பொதுவாக மக்களுக்கு வேறு எதனைக் குறித்தும் கவலையில்லை. நமது சில மக்கள்

மற்றும் இளைஞர்கள் அவர்களின் இந்த முன்னேற்றத்திலிருந்து தாக்கத்திற்குள்ளாகிவிடுகின்றனர். நீங்கள் எந்தப் பக்கம் சென்று கொண்டிருக்கின்றீர்களோ அது அழிவுப் பாதை மட்டுமே ஆகும்; அதனைத் தவிர்த்து வேறொன்றுமில்லை என்று அவர்களிடம் கூறுவதற்கு பகரமாக நம்மவர்களில் சிலர் தாக்கத்திற்குள்ளாகின்றனர். தாக்கத்திற்குள்ளாக வேண்டிய அவசியம் இல்லை. நாம் தப்லீஃக் செய்ய வேண்டும்.

அன்னார் (அலை) கூறினார்கள்: மேற்கத்திய நாடுகளில், முன்னேற்றமடைந்த நாடுகளில் வகை வகையான கண்டுபிடிப்புகளும், தொழில்களும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஐரோப்பா உலகியல் கல்விகளிலும், திறன்களிலும் முன்னேறுகின்றது என்பதைக் கண்டு ஆச்சரியம் அடையாதீர்கள். இவர்கள் முன்னேறிக் கொண்டிருக்கின்றனரே! என்று ஆச்சரியம் கொள்ளாதீர்கள். விண்ணியல் ஞானங்களின் கதவுகள் அடைக்கப்பட்டு விடப்படும்போது பின்னர் பூமியின் விஷயங்களின் எண்ணங்கள் மட்டுமே தோன்றுகின்றன. நபிமார்கள் எந்திரங்களை உருவாக்கி வந்தனர் அல்லது உதிரிப் பாகங்களை..உருவாக்கி வந்தனர் அல்லது அவர்களின் அனைத்து முயற்சிகள் மற்றும் திறமைகளின் உச்சம் புவியியல் கண்டுபிடிப்புகளாக இருந்தன என்று ஒருபோதும் நிரூபணமாகவில்லை. (மல்ஃபூஸாத், தொகுதி 2, பக்கம் 253- 254, 1984-ம் ஆண்டு பதிப்பு)

**எனவே உலகை சம்பாதிப்பதற்காக நாம் அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொள்ளவில்லை. மாறாக, இறைவனுடன் உயிருள்ள தொடர்பை உருவாக்குவதற்காக அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொண்டுள்ளோம்; மேலும் நாம் இந்த தூதுச் செய்தியை உலக மக்களுக்கு எட்ட வைக்கவும் வேண்டும் என்ற இந்த விஷயம் நம்மில் ஒவ்வொருவரின் மனதிலும் நன்றாக பதிந்து விட வேண்டும். இந்த விஷயமே நமது இம்மையையும், மறுமையையும் சீர்படுத்தக் கூடியதாக இருக்கும்.**

அன்னார் (அலை) தமது வருகையின் நோக்கத்தை எடுத்துரைத்தவாறு கூறுகின்றார்கள்: ஏகத்துவம், நல்லொழுக்கம் மற்றும் ஆன்மிகத்தை பரப்ப வேண்டும் என்பதே எனது வருகையின் அசல் நோக்கம் ஆகும். ஏகத்துவம் என்பதன் பொருள் என்னவென்றால், இறைவனையே தமது இலக்காகவும், நோக்கமாகவும், நேசனாகவும், எஜமானனாகவும் உறுதி கொள்வது ஆகும். சிறு,சிறு சிலை வணக்கம் எனும் ஷிர்க்கிலிருந்து காரணிகளை வணங்குதல் எனும் ஷிர்க் வரையிலும், தனது நஃப்ஸை பெரிதாக கருதிக் கொள்கின்ற ஷிர்க் வரையிலும் அனைத்தையும் (உள்ளத்திலிருந்து) அகற்ற வேண்டும். ஒவ்வொரு விஷயத்திலும் தமது நஃப்ஸையும் இணைத்துக் கொள்ளக் கூடாது; நுட்பத்திலும் நுட்பமான விஷயத்திலும் கூட ஷிர்க் இணைந்து விடக் கூடாது. இதுவே தவ்ஹீத் (ஏகத்துவம்) ஆகும். இதில் தான் முழு உலகமும் சிக்கியுள்ளது. இன்றைய நாட்களில் இதிலிருந்து தப்பிக்க வேண்டும்.

நல்லொழுக்கம் என்பதன் பொருள் என்னவென்றால், மனிதன் எந்த அளவிற்கு ஆற்றல்களை எடுத்துக் கொண்டு (பூமியில்) வந்துள்ளானோ அவற்றை உரிய இடத்திலும், சந்தர்ப்பத்திலும் பயன்படுத்துதல் ஆகும். சில ஆற்றல்களை வீணாக விட்டுவதும், மேலும் சிலவற்றின் மீது மட்டுமே மிகவும் அழுத்தம் கொடுப்பதும் கூடாது.

உதாரணமாக, ஒருவர் கையை வீணாக விட்டுவிடுகின்றார் என்றால் அதன் மூலம் ஏதாவது சிறப்பு உருவாக முடியுமா? ஒருபோதும் இல்லை. மாறாக, உண்மையான மற்றும் முழுமையான நல்லொழுக்கம் என்பது இதுவே ஆகும். அதாவது, அல்லாஹ் என்னென்ன ஆற்றல்களை வழங்கி வைத்துள்ளானோ அவற்றை வரம்பு மீறிய அளவில் பயன்படுத்துதல் மற்றும் தேவையை விட குறைவாக பயன்படுத்துதல் ஆகியவற்றை செய்யாமல் இருத்தல் ஆகும். வரம்பு மீறுதல் என்பது இதுவாகும். அதாவது, உதாரணமாக, எவருக்கு நுகர்வு ஆற்றல் தேவைக்கு அதிகமாகிவிடுமோ அவரது நுகர்தல் உணர்வில் நோய் வந்துவிடும். அதாவது, அந்த மனிதனின் மோப்ப சக்தி அதிகரித்து விடும். பின்னர் அது மனிதனுக்கு ஒரு கடினமான தருணமாக மாறிவிடுகின்றது. சில மக்களுக்கு நறுமணத்தை நுகரும் ஆற்றல் கூடுதலாக இருக்கின்றது. அதன் காரணமாக அவர்களுக்கு வேதனை துவங்கி விடுகின்றது. தலை வலி ஆரம்பமாகி விடுகின்றது. இதே போன்று வேறு சில நறுமணங்கள் இருக்கின்றன. அவற்றின் காரணமாக நோய்கள் தோன்றி விடுகின்றன. எனவே, நடுநிலைப் பாங்குடன் வைப்பாயாக ; எல்லா நோயிலிருந்தும் காப்பாற்றுவாயாக!; ஆன்மிக நோயிலிருந்தும் காப்பாற்றுவாயாக! என்றே துஆ செய்ய வேண்டும். மேலும்,

கூறினார்கள்: தஃப்ரீத் என்பது இதுவாகும். அஃப்ராத் எனும் வரம்பு மீறுதலில் நுகர்தல் நோய் வந்து விடும். மேலும் பின்னர் அதனால் மேலும் கடுமையான நோய்கள் உருவாகி விடுகின்றன. நோய்ககள் அதிகரிக்கின்றன.

தஃப்ரீத் எனும் தேவையை விட அதிக குறைவு செய்தல் என்பது இதுவாகும். அதாவது, அவரது உணர்வு முற்றிலும் செயலிழந்து விடுகின்றது. மேலும், நடுநிலைப்பாங்கு என்பது இதுவாகும். அதாவது, இரண்டும் தத்தமது இடத்திலும், சந்தர்ப்பத்திலும் இருப்பது ஆகும். மேலும், இதே அந்தஸ்தையும், இடத்தையும் தான் நல்லொழுக்கம் என்று கூறுகின்றோம். மேலும் அதனையே நான் நிலைநாட்ட வந்தள்ளேன்.

நடுநிலையான பாதையை மேற்கொள்ள வேண்டும். மேலும் இஸ்லாத்தில் எந்த உயர் நல்லொழுக்கத்திற்கான கட்டளை உள்ளதோ அதனை செய்ய வேண்டும்.

அன்னார் (அலை) கூறினார்கள்: ரூஹானிய்யத் எனும் ஆன்மிகத்தின் பொருள் என்னவென்றால் இறைவனுடனான தொடர்பு உருவாகுவதால் ஏற்படுகின்ற தாக்கங்களும், அடையாளங்களும் ஆகும். மேலும் இந்தத் தன்மைகள் உருவாகாத வரை மனிதனால் புரிய முடியாது. ஆயினும், அசல் நோக்கம் இதுவே ஆகும்.

(மல்ஃபூஸாத், தொகுதி 2, பக்கம் 297, 2022-ம் ஆண்டு பதிப்பு)

எனவே இந்த அனைத்து விஷயங்கள் தான் உண்மையான நம்பிக்கையாளர் என்ற ஒரு மனிதரை உருவாக்குகின்றது. எனவே, நமது நோக்கமும், விருப்பமும், எல்லாவற்றையும் விட மிகவும் நேசத்திற்குரிய இருப்பாகவும் இறைவனின் இருப்பாகவும் இருக்கின்ற இந்த தரத்தில் நாம் இருக்கின்றோமா? என்று ஆய்வு செய்ய வேண்டிய தேவை இருக்கின்றது. ஒருவேளை அந்தத் தரம் நம்மிடம் இல்லையென்றால் பின்னர் நாம் ஈமானின் பலவீனமான அந்தஸ்தில் இருக்கின்றோம்.

எனவே, இறைவனுக்கு எதிரில், நமது ஒவ்வொர் உலகியல் ஆசையும் பொருளற்றதாக இருக்கின்றதா? என்று ஆய்வு செய்வதற்கான அவசியம் உள்ளது. அதற்கான தேவை உள்ளது. இந்த நிலை இருக்கும் என்றால் அப்போதுதான் நாம் பள்ளிவாசல்களுக்கு உரிய உரிமைகளை செலுத்தக் கூடியவர்களாக இருப்போம். அதேபோன்று நாம் பள்ளிவசால்களைக் கட்டிக் கொண்டிருக்கின்றோம் எனில், பின்னர் அதனை நிரப்புவதற்கும் நமக்கு ஒரு கவலை இருக்க வேண்டும். எனவே நமது உள்ளத்தில் எந்த அளவிற்கு ஏகத்துவத்திற்கான அழுத்தம் உள்ளது? ஆர்வம் உள்ளது? உணர்வு உள்ளது? என்று ஒவ்வோர் அஹ்மதியும் இதனைக் குறித்து சிந்திக்க வேண்டும். இதேபோன்று உயர் தரமான நல்லொழுக்கம் ஒவ்வோர் அஹ்மதியிடமிருந்தும் வெளிப்பட வேண்டும். இந்த உயர் நல்லொழுக்கங்கள் நமது தூதுச் செய்தியை எட்ட வைப்பதில் மிக முக்கியப் பங்கு வகிக்க முடியும். மேலும், நாம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் செய்துள்ள பைஅத்திற்கான உரிமையை நம்மால் செலுத்த முடியும். அஹ்மதிகள் நல்லொழுக்கம் உடையவர்களாக இருக்கின்றனர் என்ற இந்த விஷயத்தை நான் பல்வேறு பள்ளிவாசல்களின் திறப்பு விழாவிற்கு செல்லும்போது அஹ்மதிகளைப் பற்றி அறிந்திருக்கும் மக்கள் குறிப்பிடுகின்றனர். ஆயினும் ஒரு குறைவை நான் காண்கின்றேன். இந்த நல்லொழுக்கத்தைக் காட்டி பின்னர் இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத்தின் அறிமுகத்தை சரியான முறையில் செய்து வைப்பது கிடையாது. இந்த அறிமுகத்தை செய்து வைத்தால் தான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியது போன்று அஹ்மதிய்யத் மற்றும் இஸ்லாத்தைப் பற்றிய சரியான தூதுச் செய்தி ஐரோப்பிய மக்கள் வரையிலும், இந்த நாட்டின் மக்கள் வரையிலும் சென்றடைய செய்ய முடியும்.

இதேபோன்று உயர் நல்லொழுக்கத்தின் வெளிப்பாடு பரஸ்பர தொடர்புகளிலும் இருக்க வேண்டும். அந்நியர்களுடன் மட்டும் தான் வெளிப்படுத்த வேண்டும் என்பது இல்லை. அவர்களிடம் உயர் நல்லொழுக்கத்தைக் காட்டி விட்டு குடும்பத்திலும், தமது சமூகத்திலும் ஒரு குழப்பத்தை ஏற்படுத்துவது சரியல்ல. ஆக, இந்த விஷயங்கள் நல்லொழுக்கம் தொடர்பாக நாம் கருத்தில் கொள்ள வேண்டிய விஷயங்கள் ஆகும். இந்த உயர் நல்லொழுக்கங்களை உருவாக்குவதற்காகவே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அடிமைத்துவத்தில் வந்துள்ளார்கள்.

மேலும், அடுத்து அன்னார் (அலை) கூறினார்கள்: அல்லாஹ்விற்குரிய

உரிமைகள் மற்றும் அடியார்களுக்குரிய உரிமைகளை செலுத்துவதற்கான உயர் தரம் நிலைபெறும்போதுதான் ஆன்மிகத்திற்கான தரத்தின் விளைவு நெறிப்படுத்தப்படும்; மேலும் வெளிப்படும்; மேலும், ஆன்மிகம் உருவாகியுள்ளது என்பதும் தெரிய வரும். நம்மவர்கள் மற்றும் அந்நியர்களுக்கு நம்மிடம் ஓர் அழகு தென்பட்டுக் கொண்டிருக்கும். நமது பிள்ளைகளும், நம்மிடமிருந்து படிப்பினை பெறுபவர்களாக இருப்பார்கள். அப்போதுதான் நாம் இந்த தரத்தை பெறக் கூடியவர்கள் ஆவோம் என்று நம்மால் கூற முடியும்.

எங்களுக்கான அடுத்த நூற்றாண்டின் இலக்கு என்ன? என்று கடந்த நாட்களில் என்னிடம் ஜெர்மனி அமீர் ஸாஹிப் அவர்கள் கேட்டுக் கொண்டிருந்தார்கள். முதலாவது விஷயம், நான் எந்த சில விஷயங்களை குறிப்பிட்டுள்ளேனோ அவை ஆகும். அவை அனைத்து விஷயங்களும் இல்லை. எந்த சில விஷயங்களின் பக்கம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நமக்கு கவனமூட்டியுள்ளார்களோ அவை ஆகும்.

கழிந்த இந்த நூற்றாண்டில் நாம் இதனைப் பெற்றிருக்கின்றோமா? நமது இறைவனுடன் உறுதியான தொடர்பு ஏற்பட்டு விட்டதா? நமது தொழுகைகளில் உயர்ந்த தரம் நிலைபெற்று விட்டதா? நாம் தொழுகைக்கான நேரத்தில் உலகியல் பணிகளை விட்டு விட்டு தொழுகைக்காக ஆஜராகிவிடுகின்றோமா? அல்லது பள்ளிவாசல்களின் கட்டுமானத்தின் மீது மட்டுமே அழுத்தம் இருக்கின்றதா? நாம் திருக்குர்ஆன் ஓதுவதில் தொடர்ந்து நிலைபெற்றிருக்கின்றோமா?

நாம் திருக்குர்ஆனின் கட்டளைகளை தேடி அதன் படி அமல் செய்வதற்கு முயற்சி செய்கின்றோமா? நாம் நமது பிள்ளைகளை மார்க்கத்துடன் இணைப்பதற்காக முழுமையான முயற்சி செய்து கொண்டிருக்கின்றோமா? நமது பிள்ளைகளின் உலகியல் கல்விகளைப் பற்றிய கவலை மட்டும் தான் நமக்கு இருக்கின்றதா? நமது உயர் ஒழுக்கங்கள் பரஸ்பர தொடர்புகளில் رُحَمَآءُ بَيۡنَهُمۡ

(அவர்கள் தங்களுக்குள் மிக்க மென்மையுடன் நடந்து கொள்கின்றனர்) என்ற காட்சியை வெளிப்படுத்தக் கூடிய தரத்தை நாம் பெற்று விட்டோமா?

உயர் நல்லொழுக்கத்தின் முன்னுதாரணங்களை அந்நியர்களின் மீது வெளிப்படுத்தி அவர்களுக்கு இஸ்லாத்தின் அழகிய போதனையை நாம் தெரியப்படுத்திக் கொண்டிருக்கின்றோமா? அல்லது நாம் உயர் நல்லொழுக்கத்தை வெளிப்படுத்தி நாங்கள் அமைதி நிறைந்த மக்கள் ஆவோம் என்று மட்டுமே கூறிக் கொண்டிருக்கின்றோமா? ஏராளமான இடங்களில் அந்நியர்களுக்கு சில விஷயங்களை கூறுவதற்கு எனக்கு சந்தர்ப்பம் கிடைக்கும்போது, எங்களுக்கு இஸ்லாத்தின் இந்த அழகிய போதனை முதன் முறையாக கிடைத்துள்ளது என்றே பெரும்பாலான மக்கள் கூறுகின்றனர்.

நீங்கள் உங்களது தொடர்புகள் மற்றும் உயர் பண்புகளை இஸ்லாத்தின் தூதுச் செய்தியை எட்ட வைப்பதற்காக எவ்வாறு பயன்படுத்த வேண்டுமோ அவ்வாறு பயன்படுத்துவதில்லை என்பது இதிலிருந்து தெளிவாக வெளிப்படுகின்றது. லட்சக்கணக்கான எண்ணிக்கையில் பிரசுரங்கள் விநியோகம் செய்ததன் பலன் என்ன? அதனால் இஸ்லாமிய போதனையின் அறிமுகமே மக்களுக்கு ஏற்படவில்லையென்றால் (பிறகு என்ன பயன்?)

எனவே அல்லாஹ்விற்குரிய உரிமை மற்றும் அடியார்களுக்குரிய உரிமைகளை செலுத்துவதில் நாம் எந்த அளவிற்கு தரங்களை அடைந்திருக்கின்றோம்? என்று முதலில் ஆய்வு செய்யுங்கள். அந்த தரத்தை அடைந்துவிட்டீர்கள் என்றால், என்னைப் பொருத்த வரை நீங்கள் இன்னும் அடையவில்லை ; மேலும் சுயமே தம்மை ஆய்வு செய்வதால் ஒவ்வொருவருக்கும் அது தெரிந்து விடும். நான் கூறவேண்டிய அவசியம் இல்லை. பின்னர் அடுத்த நூற்றாண்டிற்கான புதிய இலக்கு என்ன உள்ளது?

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வழிகாட்டல்களின் ஒளியில் நான் எடுத்துரைத்துள்ள விஷயங்களே அடுத்த நூற்றாண்டிற்கான சுருக்கமான செயல் திட்டம் ஆகும்.

**நாம் உலகத்தின் உள்ளங்களை வெல்ல இருக்கின்றோம் என்ற வாதத்தை எடுத்துக் கொண்டு நிற்கின்றோம். இந்த உலகத்தை ஏக இறைவனை ஏற்கச் செய்ய வேண்டும். உலகை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பாதங்களில் கொண்டு வந்து விடுவோம்; என்பது நமது வாதமாகும். எனவே இந்த அடிப்படையில் நம்மில் ஒவ்வொருவரும் தம்மை ஆய்வு செய்ய வேண்டும். மேலும், நாங்கள் உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்கியவாறு நமது இந்த நோக்கத்தை அடைவதற்கு முழு முயற்சி செய்வோம்; மேலும், எங்களது பிள்ளைகளுக்கும், சந்ததிகளுக்கும் இதற்கான அறிவுரை செய்து கொண்டிருப்போம்; மேலும் அல்லாஹ்வுடனான தொடர்பிற்கான ஆர்வம் ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறைக்கு கடந்து கொண்டே சென்று விடும் அளவிற்கு அவர்களுக்கு தர்பிய்யத் செய்வோம் என்ற ஒரு புதிய உறுதியுடன் ஜெர்மனியின் அஹ்மதிய்யா ஜமாஅத் புதிய நூற்றாண்டில் நுழைய வேண்டும். அல்லாஹ் நமக்கு அதற்கான நற்பேறு வழங்குவானாக.**

தமிழாக்கம்
மவ்லவி A.அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * * * * *

**மல்ஃபூஸாத்... (1ம் பக்க தொடர்ச்சி)**

கொண்டவராகவும் இருப்பதை விரும்புவதில்லை.

ஆனால், அதனை அவர் பார்ப்பதால் விரும்புகின்றார். மேலும், ஒழுக்கத்தை பார்ப்பதில்லை. எனவே அதன் சிறப்புகளை அறியாதவராக திகழ்ந்து அதனை விரும்புவதில்லை. கண் பார்வையற்ற ஒருவரை பொருத்த வரை அழகும் அழகற்றதும் இரண்டும் ஒன்றே ஆகும். இதேபோன்று, அகப்பார்வையைப் பெற்றிராத அந்த மனிதர் இந்த கண் பார்வையற்றவரைப் போன்றவர் ஆவார். கல்க் என்பது வெளிப்படையான விஷயம் ஆகும். ஆனால் குல்க் என்பது ஒரு தத்துவம் சார்ந்த விவகாரம் ஆகும். ஒழுக்கச் சீர்கேடுகள் மற்றும் அவற்றின் சாபங்களைப் பற்றி அறிந்திருந்தால் பின்னர் உண்மை தெளிவாகிவிடும்.

சுருக்கமாக, நல்லொழுக்கத்தின் அழகு எப்படிப்பட்ட ஓர் அழகு என்றால், அதனையே உண்மையான அழகு என்று கூறவேண்டும். மிகக் குறைவானவர்களே இதனை அடையாளம் காண்கின்றனர். நல்லொழுக்கம் என்பது நன்மைகளுக்கான திறவுகோல் ஆகும். உதாரணமாக, ஒரு தோட்டத்தின் கதவுகள் தாழிடப்பட்டிருக்கின்றன. தொலைவில் பூக்களும், கனிகளும் தென்படுகின்றன. எனில் ஒருவரால் உள்ள செல்ல முடியாது. ஆனால், பூட்டுத் திறக்கப்பட்டு விட்டால் பின்னர் உள்ளே சென்றால் முழு உண்மையும் தெரிந்து விடும். மேலும், உள்ளத்திற்கும் மனதிற்கும் ஒரு மகிழ்ச்சியும்,புத்துணர்வும் கிடைக்கும். நல்லொழுக்கத்தை பெற்றுக் கொள்வது என்பது ஒருவகையில் பூட்டைத் திறந்து உள்ளே நுழைவது ஆகும்.

(மல்ஃபூஸாத், தொகுதி 1, பக்கம் 481,
காதியான் பதிப்பு, 2018-ம் ஆண்டு பதிப்பு)

* * * * * * *

**உங்களுக்கு வேலையாட்கள் வேண்டுமா?**

உங்களுக்கு டிரைவர், மேஸ்திரி, மெக்கானிக், எலக்ட்ரீசியன் தேவையென்றால் எங்களை தொடர்பு கொள்ளவும்.

**நாங்கள் உங்களுக்கு நம்பிக்கையான, நல்ல வேலையாட்களை ஏற்பாடு செய்துகொடுப்போம்.**

KHAIRUL-ISLAM
JAYGON-WEST BENGAL 97348 44732




Manufacturer and Retailer of Leather Fashion and Bags.
Specialized in the Desing and Production of Quality & Sale Online Platform
Like Flipkart, Amazon, Meesho. & Product Key Word is "Grizzly Wallet"
6294738647 mygrizzlyindia@gmail.com, www.mygrizzlyindia.com

my grizzly india
my grizzly india
my grizzly india

**அமைதியின் ஒரு கலங்கரை விளக்கம்**

**முஸ்லிம்கள் ஒன்றிணைந்து பரஸ்பர அன்பு மற்றும் ஒற்றுமையின் உணர்வுடன் ஏக இறைவனை அந்த இறைவன் கற்றுத் தந்த விதத்தில் வணங்க வழி செய்வதே ஒரு பள்ளிவாசலின் தலையாய நோக்கமாகும். அதே நேரத்தில் மனித குலத்திற்கு சேவை செய்யும் ஒரு மையமாக அந்தப் பள்ளிவாசல் இருக்க வேண்டும் என்பது அந்த பள்ளிவாயிலின் இரண்டாவது அடிப்படை நோக்கமாக இருக்க வேண்டும்**

**தேவை அல்லது துன்பம் ஏற்படும்போது மற்ற நம்பிக்கைகள் கொண்ட மக்களுடன் தோளோடு தோள் நிற்க வேண்டும்**

**பரஸ்பர மரியாதை மற்றும் சகிப்புத் தன்மை ஆகியவை அடிப்படை நற்பண்புகள் ஆகும் என்று இஸ்லாம் ஆரம்பத்தில் இருந்தே கற்றுத் தந்துள்ளது**

**துக்கம் மற்றும் விரக்தியின் காலங்களில் எங்கள் அண்டை வீட்டாரின் கண்ணீரைத் துடைக்கவும் அவர்களை ஆதரிக்கவும் ஆறுதல் நல்கவும் நாங்கள் எப்போதும் இருப்போம்.**

## ஸய்யிதுனா ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஃபிலடெல்ஃபியா, அமெரிக்காவில் பைத்துல் ஆஃபியத் பள்ளிவாயில் திறப்பு விழாவையொட்டி அக்டோபர் 21, 2018 அன்று ஆற்றிய உரை

**சென்ற இதழின் தொடர்ச்சி........**

ஒவ்வொரு வழிபடுபவருக்கும், சமுதாயத்தின் ஏனைய அனைத்து அங்கத்தினர்களின் உரிமைகளையும், நிறைவேற்றுவதற்கு ஓர் ஆழ்ந்த பொறுப்பு உள்ளது. இதன் விளைவாக ஓர் உண்மையான பள்ளிவாயில் கருணை, தயாளம் மற்றும் ஒற்றுமையின் அடையாளமாகவும், வெளிப்பாடாகவும் திகழ்கிறது. உலகில் நாங்கள் எங்கு பள்ளிவாசல்களை திறந்தாலும், அங்கு இறை வணக்கம் செய்யும் எங்கள் இயக்கத்தின் உறுப்பினர்கள் சக குடிமக்களுக்கான அன்பு, அனுதாபம் மற்றும் அவர்களின் மீதான பற்று ஆகியவற்றின் தரத்தை உயர்த்தியே வந்திருக்கின்றார்கள் என்பதற்கு அஹ்மதிய்யா முஸ்லிம் இயக்கத்தின் வரலாறு சாட்சி பகர்கின்றது.

எங்கள் பள்ளிவாயில்கள் ஒருவேளை அஹ்மதி முஸ்லிம்களை எதற்காகவாவது தூண்டினால் அது பயங்கரவாதம் மற்றும் தீவிரவாதத்திற்காக அல்லாமல் மனித குலத்திற்கு சேவை செய்வதற்காகவும், சக மனிதர்களுக்காக எங்கள் இதயங்களை திறப்பதாகவும் மட்டுமே ஆகும். எங்கள் பள்ளிவாயில்கள் சமாதானத்தை பரப்புவதற்காக இருக்கின்றது. மேலும் வாழ்வின் பல்வேறு மட்டத்திலிருந்தும் வரும் மக்களோடு சகோதர உறவு மற்றும் பரஸ்பர நேசத்தின் பிணைப்புகளை வளர்த்தெடுப்பதற்காகவும் இருக்கின்றது. மேலும், அனைத்து விதமான வெறுப்பு,முரண்பாடு மற்றும் பிரிவினை ஆகியவற்றை அகற்றுவதற்குமான எங்கள் உறுதியை வளரச் செய்கின்றன.

இந்த நகரம் சகோதர வாஞ்சையின் நகரம் என்று அழைக்கப்படுகின்றது. நிச்சயமாக, இங்கும் இதற்கு அப்பாலும் அன்பு, சகோதரத்துவம் மற்றும் நல்லெண்ணம் ஆகியவற்றை பரப்புவதற்கான எங்களின் முயற்சிகள் தீவிரமடையும் என்ற வாக்குறுதியின் ஓர் அடையளமாக உண்மையில் ஓர் அர்ப்பணிப்பாக எங்களின் புதிய பள்ளிவாயில் இருக்கின்றது. இதுபோன்ற வாதங்களை எளிதாக செய்யலாம் என்றாலும், எங்களுடைய வரலாறு எங்களின் வார்த்தைகள் மேற்போக்கானவை அல்ல. மாறாக, உண்மையான பொருள் கொண்டவை என்பதை நிரூபிக்கின்றது. எல்லாக் காலங்களிலும் நாங்கள் போதிப்பதையே நாங்கள் பின்பற்றுவதற்கும் முழுமையாக முயற்சி செய்கின்றோம். எனவே பைத்துல் ஆஃபியத் அதாவது பாதுகாப்பின் இல்லம் என்று பெயரிடப்பட்டுள்ள இந்தப் பள்ளிவாயில் உண்மையிலேயே முழு சமூகத்திற்கும் அமைதியின் ஊற்றாக விளங்குகின்றது என்று உள்ளூர் சமூகம் விரைவில் பாராட்டும் என்று நான் முழுமையாக நம்புகின்றேன்.

மேலும், நான் தெளிவுபடுத்த விரும்புவது என்னவென்றால், சமாதானத்திற்கான எங்களின் அர்ப்பணிப்பிற்கும், மனித குலத்திற்கு சேவை செய்ய நாங்கள் ஏற்றிருக்கும் எங்கள் சபதத்திற்கும் எங்களின் மத நம்பிக்கையும், எங்களின் மத போதனைகளுமே முழு காரணமாக விளங்குகின்றன. வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (மெஸாயா) மற்றும் இமாம் மஹ்தி (நேர்வழி வழங்கப்பட்ட தலைவர்) என்று நாங்கள் நம்புகின்ற அஹ்மதிய்யா முஸ்லிம் சமூகத்தின் நிறுவனர் தம்மை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைச் சேர்ந்த மஸீஹ் (மெஸாயா) என்று வெளிப்படையாக அறிவித்தார். மேலும, தான் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களைப் பின்பற்றி வந்த மெஸாயாவின் அமைதியின் அடிச்சுவடுகளில் நடக்கக் கூடியவர் என்றும் அறிவித்தார்கள்.

மேலும், தான் இரண்டு முதன்மையான நோக்கங்களுடன் சர்வ வல்லமையுள்ள இறைவனால் அனுப்பப்பட்டுள்ளதாகவும் அன்னார் (அலை) பிரகடனம் செய்தார்கள்.

முதலாவதாக, மனித குலத்தை அதன் படைப்பாளனிடம் மீண்டும் அழைத்து வரவும், அந்த இறைவனுக்குரிய உரிமைகளை நிறைவேற்றுவதற்காக மக்களின் கவனத்தை ஈர்க்கவும் அன்னார்(அலை) அனுப்பப்பட்டார்கள். இரண்டாவதாக, மனித குலம் மானுடப் பண்புகளை மதிக்கவும், ஒருவர் மற்றவரது உரிமைகளை நிறைவேற்றவும் வலியுறுத்திட அன்னார் (அலை) தோன்றினார்கள். எனவே வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் இமாம் மஹ்தியை ஏற்றுக் கொண்ட அனைத்து அஹ்மதி முஸ்லிம்களும், சர்வ வல்லமையுள்ள இறைவனின் நெருக்கத்தைப் பெறுவதற்கான மற்றும் மனிதயினத்திற்கு சேவை செய்வதற்கான ஒவ்வொரு வாய்ப்பயையும் பெற முயல்வது கட்டாயமாகும்.

இதுவே எங்களுக்கு புனித திருக்குர்ஆன் மற்றும் புனித இறைத் தூதர் முஹம்மது (ஸல்) மூலமாக மீண்டும், மீண்டும் போதிக்கப்பட்டுள்ளது. அதிகாரம் 4, வசனம்-37ல் திருக்குர்ஆன் இவ்வாறு கூறுகின்றது:

அல்லாஹ்வையே வணங்குங்கள். அவனுக்கு யாரையும் இணை வைக்காதீர்கள். பெற்றோருக்கும், உறவினர்களுக்கும், அநாதைகளுக்கும், தேவையுடையோருக்கும் உறவினராய் இருக்கும் அண்டை வீட்டாருக்கும் மற்றும் அந்நியராய் இருக்கும் அண்டை வீட்டாருக்கும் உங்களுடன் இருக்கும் தோழருக்கும், வழிப்போக்கருக்கும் மற்றும் உங்கள் வலக்கரம் சொந்தமாக்கிக் கொண்டவருக்கும் கருணை காட்டுங்கள். நிச்சயமாக அல்லாஹ் ஆணவம் கொண்டவர்களையும், பெருமையடிப்பவர்களையும் நேசிப்பதில்லை.

திருக்குர்ஆனின் இந்த ஒற்றை வசனம் அறநெறி மற்றும் மனித உரிமைகளின் மகத்தான சாசனமாகும். இது சமாதானத்திற்கான பொன்னான வழிமுறையும், சகோதர அன்பிற்கான வழிவகையும் ஆகும். இந்த வசனத்தில், தன்னை வணங்குவதற்கு மட்டுமல்லாமல் முஸ்லிம்கள் தங்கள் பெற்றோர்களுடனும், உறவினர்களுடனும் அன்பு மற்றும் நேசத்துடன் நடக்கவும் அல்லாஹ் கட்டளையிடுகின்றான். அதன் பிறகு, ஒருவர் தமது அண்டை வீட்டாரின் உரிமைகளை நிறைவேற்ற வேண்டும் என்றும் சிறப்பாக குறிப்பிடப்பட்டுள்ளது. தங்கள் அண்டை வீட்டாரை நேசிக்கும்படியும், பாதுகாக்கும்படியும் அவர்களுக்கு தேவை ஏற்படும் காலங்களில் எல்லாம் அவர்களுக்கு உதவ தயாராக இருக்கம்படியும் முஸ்லிம்களுக்கு கற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.

மேலும், அண்டை வீட்டார் என்ற சொல்லிற்கு இஸ்லாத்தில் மிகவும் பரந்த அர்த்தம் உள்ளது என்பதை நான் தெளிபடுத்திட வேண்டும். இது அருகில் வாழும் மக்களை மட்டுமல்லாமல் நம்மை விட்டும் தொலைவில் வசிப்பவர்கள், பயணத் தோழர்கள், நம்முடன் பணிபுரியும் சக ஊழியர்கள் நமக்குக் கீழே இருப்பவர்கள் ஆகிய இவர்களையும் இன்னும் பலரையும் குறிக்கின்றது. உண்மையில், புனித திருக்குர்ஆன், ஒரு முஸ்லிமின் ஊரிலோ அல்லது நகரத்திலோ வாழும் மக்கள் அனைவரையும் அவர்களின் அண்டை வீட்டார் என்றே பிரகடனப் படுத்துகின்றது.

இஸ்லாத்தின் புனித நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அண்டை வீட்டாரின் உரிமைகளை நிறைவேற்றுவது குறித்து மீண்டும், மீண்டும் முஸ்லிம்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்கள். உண்மையில், அண்டை வீட்டுக்காரர்களின் உரிமைகளை நிறைவேற்றுவதன் முக்கியத்துவத்தை எந்த அளவிற்கு இறைவன் ஊக்கப்படுத்தி வலியுறுத்தினான் என்றால் ஒருவேளை அவர்கள் ஒருவரின் சொத்துரிமைக்குரிய வாரிசுதாரர்களில் ஒருவராக சேர்க்கப்பட்டு விடுவாரோ என்று அன்னார் (ஸல்) நினைக்கின்ற அளவிற்கு அந்த எல்லாம் வல்ல அல்லாஹ் வலியுறுத்தினான் என்றும் அன்னார் (ஸல்) கூறியுள்ளார்கள்.

இதன் விளைவாக, நாம் இங்கே ஃபிலடெல்ஃபியாவில் ஒரு பள்ளிவாசலைக் கட்டியிருக்கின்றோம் என்றால், மேலும் இங்கு அஹ்மதி முஸ்லிம்களின் ஒரு சமூகத்தை நிறுவியிருக்கின்றோம் என்றால், இந்த நகரத்தின் சமாதானமும், செழிப்பும் அதிகரிக்க வேண்டும்; மேலும், இந்த மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்ற நோக்கத்துடன் தான் இதனை செய்திருக்கின்றோம்.

இப்போது இந்தப் பள்ளிவாசல் திறக்கப்பட்டிருப்பதால் உள்ளூர் அஹ்மதி முஸ்லிம்கள், இந்த நகரத்தில் உள்ள அனைவரையும் தங்கள் அண்டை வீட்டினராகக் கருதி அவர்களுக்கான அதிகமான உரிமைகளை உணர்ந்து, தங்களால் இயன்ற அளவிற்கு தங்களின் திறன்களைக் கொண்டு அந்த

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785
Weekly BADAR Qadian
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
Postal Reg.No. GDP-39/2023-2025 Vol. 8 Thursday 05 october 2023 Issue No. 40

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

உரிமைகளை நிறைவேற்ற முயற்சிப்பார்கள். எப்பொழுதெல்லாம் உங்களில் ஒருவருக்கு உதவித் தேவைப்படுகிறதோ அப்பொழுதெல்லாம் எங்களால் இயன்ற வழியில் உங்களுக்கு உதவியும், ஒத்தாசையும் செய்வதற்காக நாங்கள் இருப்போம் என்று உறுதியளிக்கின்றோம்.

துக்கம் மற்றும் விரக்தியின் காலங்களில் எங்கள் அண்டை வீட்டாரின் கண்ணீரைத் துடைக்கவும் அவர்களை ஆதரிக்கவும் ஆறுதல் நல்கவும் நாங்கள் எப்போதும் இருப்போம். எனவே இந்தப் புதிய பள்ளிவாயில் மக்களைக் கவரக் கூடிய ஒரு கட்டிடமாகவும், அடையாளமாகவும் இருக்கின்ற அதேநேரத்தில் இன்னும் குறிப்பிடத்தக்க வகையில் இந்த நகரத்திலும் இதற்கு அப்பாலும் அன்பையும் கருணையையும் பரப்புவதன் மூலம் சமுதாயத்தை ஆன்மிக ரீதியில் மேம்படுத்தவும், அழகுப்படுத்தவும் செய்யும் என்பதை நீங்களே கண்டு கொள்வீர்கள் என்று நான் உறுதியாக நம்புகின்றேன். சாதி, மத நம்பிக்கை அல்லது நிறத்திற்கு அப்பாற்பட்டு சமாதானத்தை விரும்பும் அனைத்து மக்களுக்கும் ஒளி தரும்; நம்பிக்கை தரும் கலங்கரை விளக்கமாக இது இருக்கின்றது என்பது நிரூபணம் ஆகும்.

இந்த வார்த்தைகளுடன் இந்த நகரத்திலுள்ள அனைத்து மக்களும் அவர்கள் யாராக இருந்தாலும், எதில் நம்பிக்கை கொண்டிருந்தாலும் அவர்கள் ஒன்றாக இணைந்து பொது நலனுக்காக பாடுபட்டு உண்மை மற்றும் நீடித்த அமைதியின் ஒரு சூழலை வளர்க்க முயல வேண்டும் என்று நம்பிக்கை கொண்டு பிரார்த்தனையும் செய்கின்றேன்.

மத சுதந்திரம் மற்றும் வழிபாட்டு சுதந்திரம் ஆகியவற்றிற்கு அனுமதி வழங்கிய முதல் காலனித்துவ நகரம் ஃபிலடெல்ஃபியா என்று கூறப்படுகிறது. மேலும், இது சுதந்திரத்திற்கான பிரகடனம் கையெத்தான வரலாற்றுச் சிறப்பு மிகக் நகரமும் ஆகும். ஆகவே இந்த நகரம், வளமான, பெருமை மிகுந்த வரலாறு கொண்டது. எனவே எனது பிரார்த்தனை என்னவென்றால், இந்த நகரத்தின் மக்கள் தங்களின்ச சிறப்பு மிக்க வரலாற்றை மேலும் வளரச் செய்ய வேண்டும். இந்த உயர்ந்த மரபுகள் எப்பொழுதும் உங்கள் வருங்காலத்தின் குறிக்கோளாக விளங்க வேண்டும் என்பதாகும்.

இந்த நகரம் எப்பொழுதும் சுதந்திரத்தின் கலங்கரை விளக்கமாக விளங்க வேண்டும். இந்த நகரத்தின் மக்கள் இங்கு மட்டுமல்லாமல் அமெரிக்கா முழுவதும் இன்னும் கூறப்போனால் உலகம் முழுவதும் சமாதானத்தை முன்னெடுத்துச் செல்ல தங்களின் பங்களிப்பை வழங்க வேண்டும். எங்களின் உறுப்பினர்கள் இங்கே மிகவும் குறைந்த அளவில் இருந்தாலும் அத்தகைய உயர்ந்த முயற்சிகளை ஆதரிக்கவும், தேவைப்படும் எந்த உதவியையும் வழங்கவும் அஹ்மதிய்யா முஸ்லிம் சமூகம் எப்பொழுதும் தயாராக உள்ளது என்று நான் உங்களிடம் உறுதி கூறுகின்றேன்.

**எல்லாம் வல்ல அல்லாஹ் அனைத்து நகரங்கள் மற்றும் நாடுகளிலும் உண்மையான சமாதானத்தை மேலோங்கச் செய்வானாக. இறுதியில் இன்று இங்கு எங்களுடன் கலந்து கொண்ட உங்கள் அனைவருக்கும் நான் எனது உளமார்ந்த நன்றியை தெரிவிக்க விரும்புகின்றேன்.**

அல்லாஹ் உங்கள் அனைவரையும் ஆசீர்வதிப்பானாக!

மிக்க நன்றி.

தமிழாக்கம்
ஷேக் ஃபயாஸ் அஸ்லம்

* * * *

## தஃப்ஸீரே கபீர்... (1ம் பக்க தொடர்ச்சி)

பாதுகாப்பை கருத்தில் கொண்டு மக்களின் கோபம் மற்றும் யூதர்களின் அநீதிகள், மற்றும் ரோமானிய அரசாங்கத்தின் அநீதிகளிலிருந்து தப்பிப்பதற்காக இந்த பாதாள அறைகளில் சென்று அடைக்கலம் பெற்று வந்தனர். (பக்கம் 63)

பின்னர் சற்று முன்னால் சென்று இவ்வாறு அவர் எழுதுகின்றார்: இந்த பதுங்கு குழிகளிலும், பாதாளக் குகைகளிலும் அடைக்கலம் பெறும் நிர்பந்தத்திற்கு அவர்கள் ஆளாகியிருந்தனர். இந்த இடத்தில் அந்த பாதாள அறைகளுக்கு கேவ் Cave என்ற சொல்லை அவர் பயன்படுத்தியுள்ளார். அது கஹ்ஃப் என்ற அரபி மொழியின் சொல்லிலிருந்து மருவிய சொல்லே ஆகும். ஆக, ஒருவகையில் இவ்வாறு இந்த ஆங்கிலேயே நூலாசிரியர் திருக்குர்ஆன் பயன்படுத்தியுள்ள அதே சொல்லையே பயன்படுத்தியுள்ளார். அவர்களுக்கு அவ்வாறு செய்வதற்கான அவசியம் இருந்தது. (டேக்டிஸ்) ரோமானிய வரலாற்றாசிரியர்களின் சாட்சியங்களில் இருந்து நிரூபணமாகின்றது. நீரோ மன்னன் மக்களை சந்தோஷப்படுத்துவதற்காக கிறிஸ்தவர்களை உயிருடன் எரித்தல், நாய்களை கொண்டு குதறச் செய்தல் மற்றும் சிலுவையில் அறைதல் போன்ற பல்வேறு வழிமுறைகளை கையாண்டு வந்தான். மேலும், இந்த நோக்கத்திற்காக அவன் தனது அரசத் தோட்டத்தை உருவாக்கியிருந்தான். எந்த சமுதாயத்தின் மீது இந்த அளவிற்கு சாதாரணமாக அநீதியிழைக்கப்படுமோ அது இங்கும் அங்கும் தப்பித்து அடைக்கலம் பெறுவது வெளிப்படையாகும்.

கிறிஸ்தவர்கள் இந்த இடங்களில் அடைக்கலம் புகத் தொடங்கியபோது பின்னர் அடைக்கலம் பெற்ற நாட்களில் அதிக பாதுகாப்பிற்காக அந்த பாதாளக் கல்லறைகளில் அவர்கள் அறைகளை உருவாக்கத் தொடங்கிவிட்டனர். இதேபோன்று எந்த மக்கள் ஷஹீது ஆகிவந்தார்களோ அவர்களின் சடலங்கள் அவமரியாதை செய்யப்படுவதிலிருந்து பாதுகாக்கும் பொருட்டும் அவர்கள் இந்த பாதாள அறைகளில் அந்த சடலங்களை கொண்டு சென்று அடக்கம் செய்து வந்தனர். இந்தத் தொடர் முந்நூறு வருடங்கள் வரை நீண்டு கொண்டு சென்றது. எனவே இந்த பாதாள அறைகள் எந்த அளவிற்கு அதிகமாகி விட்டன என்றால் சில மக்களை அனுமானத்தின்படி அவர்கள் பதினைந்து அடி நீளம் வரை (பூமிக்கு அடியில்) சென்று இருந்தனர். அநீதிகள் தொடந்து நிகழ்வதில்லை என்பதால் இடையில் சில அரசர்கள் மென்மையுடன் நடந்து வந்தனர். மேலும், கிறிஸ்தவர்கள் மீண்டும் நகரத்திற்கு திரும்பி வந்திருந்தனர். பின்னர் கடுமைக்கான காலம் வரும்போது பின்னர் தப்பித்து அந்த இடங்களில் சென்று மறைந்து கொள்வார்கள். சில முறை அங்கு மாதங்கள் அல்லது வருடக் கணக்கில் அவர்களுக்கு தங்க வேண்டியது நேரிட்டது. ஏனெனில், அவற்றுக்குள் பள்ளிக் கூடங்கள் மற்றும் தேவாலயங்களுக்கான அறைகளும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

சுருக்கம் என்னவென்றால், குகை வாசிகளின் சம்பவங்களில் துவக்க காலத்தின் நிலைமைகள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. மேலும், கிறிஸ்தவ சமுதயாத்தின் துவக்கம் என்பதோ இவ்வாறு நிகழ்ந்தது. அதாவது, அவர்கள் சிலை வணக்கத்திற்கு எதிராக ஜிஹாது செய்து வந்தனர். மேலும், ஷிர்க்கிலிருந்து தப்பிப்பதற்காக அவர்கள் நூற்றாண்டுகள் வரை பெரும், பெரும் தியாகங்கள் செய்தனர். ஆனால், முடிவு எவ்வாறு அமைந்துள்ளது என்றால் அசல் மார்க்கத்தின் எந்த அடையாளமும் தற்போது கிறிஸ்தவர்களிடம் காணப்படுவதில்லை.

( தஃப்ஸீரே கபீர், தொகுதி 4, பக்கம் 424, 2010-ம் ஆண்டு காதியான் பதிப்பு)

* * * * * * * * * *

**National Watch Company**
**Sales & Service**

**B. Mohamed Adil**
93632 06679
99433 38000
196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM
99947 57172
**O.A.N. Doors & Steels**
V.A. SAIT
99430 30230

All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad